Registered No. M. 878.

பூர்ணசந்திரோதயம்.

A Tamil Monthly Journal

Devoted to Theosophy, Religion, Science. Art and Civilization.

தொகுதி 4.	1914௵ பிப்பிரவரி௴ 15௳ பிரமாதீச௵ மாசி௴ 4௳	பகுதி 10

அ. ரங்கஸ்வாமி ஐயர், B. A., B. L., F. T. S., —பத்திராதிபர்.

வருஷ சந்தா ரூ. 2 தனிப்பிரதி அணா 4.

மதுரை:

விவேகபாநு அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பெற்றது.

பொருளடக்கம்.

(CONTENTS.)

1. தற்காலநிலைமை—அ. ரங்கஸ்வாமி ஐயர் 345

From the Editor—A. Rangaswami Iyer

2. காலஞ்சென்ற நமது பத்திராதிபர் பிரஹ்மஸ்ரீ ப. நாராயண ஐயரவர்களின் சரித்திரச் சுருக்கம்—P.N. நாகநாத ஐயர் 351

A. short sketch of the life of the Mr P. Narayana Iyer, late Editor } P.N. Naganathier.

3. ஸ்ரீ ப. நாராயண ஐயரவர்கள் பேரில் இரங்கற்பாக்கள். } எல். சாமிநாதையர். 362

Verses in memoriam of Mr. P. Narayana Iyer. } S. Swaminathier.

4. பிரஹ்மக்ஞான தர்சனம் (பாலபாடம்) } வி. வெங்குசாமி ஐயர். 364

Elements of Theosophy—V. Venguswamy Iyer.

5. துகாராம் பாவாவின் சரித்திரம்—ஏ. சிவராவ். 367

Life of TukaramBaba—A. Siva Rao.

6. ஆத்மபோதம்—யோகி சுந்தரராஜம். 370

Atmabodha—Yogi Sundararajam.

7. ஸ்ரீ ப. நாராயண ஐயரவர்கள் பேரில் இரங்கற்பாக்கள் } மு. வேங்கடஸாமி நாட்டார். 371

Verses in memoriam of Mr. P. Narayana Iyer, } M. Venkatasamy Nattar.

8. பத்திரிகை வரவு 373

Review of Magazines.

9. சமாசாரம் 378

News

ௐ

सत्यात् नास्ति परो धर्मः

3.27

பூர்ணசந்திரோதயம்.

தொகுதி 4. } 1914ஆம் பிப்பிரவரிமீ 15உ பிரமாதீசஆம் மாசிமீ 4உ { பகுதி 10

தற்கால நிலைமை.

சென்ற ஜனவரிமீ 23உ வெள்ளிக்கிழமை ஸ்ரீமான் ஸி. ஜீனராஜதாஸர் அடையாற்றினின்று மதுரைக்கு வந்திருந்தனர்; அன்று மாலையில் மதுரை காலேஜ் ஹாலில் "நாள் தோறும் நாம் அப்பியஸிக்கவேண்டிய ஆத்மார்த்த ஒழுக்கம்" (Spiritual Life for Every day) என்னும் விஷயத்தைக் குறித்துப் பிரஸங்கித்தனர். உலகினர் ஸாதாரணமாய்த் தம் விர்த்திகளை லௌகிகம், வைதிகம் என்றும் சரீரார்த்தம், ஆத்மார்த்தம் என்றும் வேறுபடுத்தி, ஒன்றுக்கொன்று சம்பந்தம் கொஞ்சமேனும் இல்லையென்வெண்ணி விபரீதமான வழிகளை யநுசரிக்கிறார்களென்றும், அவர்கள் ஆத்மார்த்தம் என்று கைக்கொள்ளும் ஆசாரங்கள் அவர்களுடைய ஒழுக்கத்தையும் சீலத்தையும் நலப்படுத்தாமலிருப்பது நாமறிந்த விஷயமென்றும், ஆத்மார்த்த ஒழுக்கத்தை (Spiritual life) காட்டுக்குப்போய்த் தனித்திருந்து அப்பியஸித்தல் எவ்விதம் ஸாத்தியமோ, அவ்விதமே ஜநஸமூஹத்தின் நடுவிலிருந்தும் அநுஸரித்தல் ஸாத்தியமென்றும், அற்ப விஷயங்களிலும் மஹத்தான விஷயங்களிற் போல அவ்வொழுக்கம் கைக்கொள்ளற்பாலது என்றும் வற்புறுத்திக் கூறினர்.

* * *

ஜீவன் (உயிர்) ஸன்மார்க்கத்திற் புகுந்து மேம்பாடடைதலுக்கு சரீரம் (உடல்) இன்றியமையாத தென்றும், உயிரின்றிய உடல் சவ மாகுமென்றும், உயிரும், உடலும் பரஸ்பரம் ஒன்றின் பிரயோஜனத்தை மற்றொன்று ஆசிரயித்திருக்கிற தென்றும், எவ்வளவு கல்வி கற்றாலும், எத்தகைய ஞான நூல்களை ஆராய்ந்திருந்தாலும் அக் கல்வியறிவு ஒழுக்கத்தைச் சீர்ப்படுத்தினாலன்றி பிரயோஜனமற்ற தென்றும் தெரிந்து கொள்ளாதவர் நம் தேசத்தில் பலருளர். வேதங்கள் ஓதுதலும், சாஸ்திரங்கள் படித்தலும், வியாக்யானங்கள் கற்றலும், பரோபகாரத்திலும், ஸத்தியத்திலும், தர்மத்திலும், ஸ்திரமாய் நிலை பெறுதற்கு ஸாதகங்களேயன்றி வேறில்லை. ஞானியானவன் அவனுடைய வாழ்நாளில் செய்யும் ஒவ்வொரு அற்ப காரியத்தையும் ஈசுவர கைங்கரியத்திற் சேர்ந்ததாகவே நினைத்து அதை யவனுடைய பூர்ண சக்தியுடன் செய்து முடிக்கப் பிரயத்நம் செய்வான். இக்காலத்தில் ஞான சாஸ்திரங்கள் முதலியனவை கற்றலுக்கும் நல்லொழுக்கத்திற்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை போல் பாவிக்கப்படுகின்றது. இப்படி யிருத்தல் கீழான தசையின் குறியாகும்.

* * *

ஸ்ரீமான் வி. ஜீனராஜதாஸர் பிரஸங்கமானது கம்பீரமாயும், ஆழ்ந்த கருத்துக ளடங்கியதாயும், அதனால் எல்லோரும் வியப்போடு கவனிக்கத்தக்கதாயு மிருந்தது. ஸத்குருவின் கடாக்ஷத்தை யடைந்து, அதின் மூலமாக அப்பிரஸங்கம் கேட்போர் புத்தியிற் புகுந்து, அவர்களின் ஒழுக்கத்தை நலம்பெற மாற்றும் வண்ணம் வீரியவத்தாயிருந்ததென்றே நாம் சொல்லத் துணிவோம். ஸ்ரீமான் ஜீனராஜதாஸர் ஸிம்ஹலமாகிய இலங்கைத் தீவில் 1875 ஸ்ரீ இல் பிறந்தார். அவர் அதி பால்யத்திலேயே இங்கிலாந்து சென்று லண்டன் ஸர்வகலாசாலையில் (London University) மெட்ரிகுலேஷன் (Matriculation) என்ற பிரதமபரீக்ஷையில் தேறினர். பிறகு கேம்ப்ரிட்ஜ் ஸர்வகலாசாலையில் (Cambridge University) பலகலைகளைப் பயின்றார். 1900 ஸ்ரீ வாக்கில் அதைவிட்டு வெளிக்கிளம்பி, இலங்கையில் ஆனந்தா காலேஜ் என்ற ஒரு வித்யாசாலையில் சில காலம் பிரதம உதவி உபாத்தியாயர் ஸ்தானத்தை வகித்து பிறகு இத்தாலியா (Italy) இங்கிலாந்து (England) அமெரிக்கா (America)

முதலிய தேசங்களில் நம்முடைய பிரஹ்மக்ஞான சபைக்காக (Theosophical Society) பிரஸங்கம் முதலியன செய்து உழைத்துவந்திருக்கின்றனர். இவ்வாறு பரோபகாரத்தையே முதன்மையாகக் கைக்கொண்டவர்களுக்குத் தான் ஸத்குருவின் ஸந்நிதானம் கிடைக்கக் கூடியதாகையால், இவர் ஸத்குருவின் அநுக்கிரஹத்தைப் பெற்றிருப்பதனால்தான் இவருடைய பிரஸங்கம் ஞானத்தைப் புகட்டத்தக்கதாயிருக்கிறது.

* * *

சனிக்கிழமை 24உ காலையில் மதுரை காலேஜ்ஹாலில், மதுரை மாணாக்கர்களுக்குத் தனி உபந்யாஸம் செய்தனர். ஸத்குண ஸம்பத்தையடைதல் (Character-building) என்னும் விஷயத்தை விஸ்தாரமாக உபதேசித்து, அதன் ஆவசியகத்திற்கு ஸாக்ஷியமான அநேக உதாரணங்களைக் கூறியும் கேம்ப்ரிட்ஜ் ஸர்வகலாசாலையில் அவருடைய அநுபவங்களை யெடுத்துச் சொல்லியும் வற்புறுத்தினர். இவருடைய பிரஸங்கத்தின் விசேஷமென்னவெனின், எடுத்துக் காட்டும் விஷயங்கள் விபக்தமாய் கேட்போர் மனத்திலமைந்து வேரூன்றி நிலை நிற்கும் வண்ணம் உள்ளது. அன்று மாலை 3 மணி முதல் 5 மணி வரை ஒரு பிரச்நோத்தர மீட்டிங்கானது பிரஹ்மக்ஞான மந்திரத்தில் கூடியது. கேட்ட கேள்விகளுக்கெல்லாம் திருப்திகரமான ஸமாதானம் அளித்தார். அநேக மாணாக்கர்கள் வந்து பல விஷயங்களில் கேள்வி கேட்டார்கள். ஷை மீட்டிங்குக்கு முந்தி நம்முடைய மதுரை பிரஹ்மக்ஞான ஸபை பிரஸிடெண்டு மகா-ா-ா-ஸ்ரீ ப. நாராயண ஐயரவர்களை அவர்களது கிருஹத்திற்குச் சென்று பார்த்து விட்டு வந்தனர்.

* * *

மறுநாள் ஞாயிற்றுக் கிழமை காலையில் பிரஹ்மக்ஞான மந்திரத்தில் மெம்பர்களுக்காக ஒரு உபந்யாஸம் செய்தனர். அன்று சாயங்காலம் 3 மணிக்கு ஸ்ரீ மீனாக்ஷீ வித்யாசாலையில், உதய நக்ஷத்திர ஸங்கம் 1914-ம் வருஷத்திய இரண்டாவது கூட்டம் கூடியது. அதற்கு ஸ்ரீமான் ஜீனராஜதாஸரும் அமெரிக்காவிலிருந்து அன்று தினம் மதுரைக்கு வந்திருந்த Mr. கூன்ஸ் என்பாரும் விஜயம் செய்தார்கள். ஜகத்குருவின் வரவை பஹிரங்கப் படுத்துவதற்கு ஏற்பட்ட

ஷை ஸங்கத்தின் கொள்கைகளையும் கோட்பாடுகளையும் அச்சங்கத்தின் தமிழ்ப் பிரதேச காரியதரிசியாகிய மகா-ா-ா-ஸ்ரீ அ. ரங்கஸ்வாமி ஐயரவர்கள் தமிழில் எடுத்துக்கூறியபிறகு Mr. கூன்ஸ் என்பவர் அது விஷயமாய் அமெரிக்காக் கண்டத்தைச் சேர்ந்த ஐக்கிய மாகாணங்களில் (United States) நடக்கும் முயற்சியைப் பற்றியும் அது பிரபலமாக விருக்கும் நிலைமையைக் குறித்தும் சுருக்கமாய்ப் பேசினர். அதன் பிறகு ஸ்ரீமான் ஜினராஜதாஸர் அச்சங்கத்தைப் பற்றி ஒரு சிறு உபந்யாஸம் செய்தனர். அந்த ஸபை கூடிக்கொண்டிருந்த சமயத்தில் மதுரை பிரஹ்மஞான ஸபையின் அக்கிராஸநம் வகித்த மகா-ா-ா-ஸ்ரீ ப. நாராயண ஐயரவர்கள் பகல் 3-30 மணிக்கு தேகவியோகமானார்.

* * *

அச்சபை முடிந்த பிறகு மாலை 5 மணிக்கு மதுரை ஸௌராஷ்டிர பாடசாலையில் "ஜகத்குருவின் வரவு" என்னும் விஷயத்தை ஸ்ரீமான் ஜினராஜதாஸர் உபந்யஸித்தனர். அச்சமயம் பிரஸங்கத்தைக் கேட்க அநேகர் கூடியிருந்தனர். இந்தியாவிலும் மற்றும் பச்சிமதேசங்களிலும் தற்காலத்தில் ஏற்பட்டிருக்கும் நூதன நிலைமைகளைப் பல உதாரணங்களுடன் விளக்கிக் காட்டி அவைகளை ஒழுங்குபடுத்துவதற்கு ஸாமான்ய மனிதர்கள் அசக்தர்களாயிருக்கின்றனரென்றும், அறிவும், ஞானமும், சக்தியும், தயையும் அபரிமிதமாயுடைய ஜகத்குரு ஒருவர் வந்தால்தான் இவ்வியவஹாரங்கள் ஒழுங்குபடத்தக்கன வென்றும், அவர் வரவை யுக்தி விவேகவாயிலாக நாம் அங்கீகரிக்கத் தக்கதென்றும் நிரூபித்தார். பல தேசங்களிலும் பல மதஸ்தர்களுக்குள்ளும் ஜகத்குருவின் திருவரவானது இச்சமயத்தில் எதிர்பார்க்கப்படுகிறதென்றும் பிரஸ்தாபித்தார். பிராசீன காலந் தொடங்கி ஜகத்குரு உலகில் அவதரித்த காலங்களிலெல்லாம் அவரது வரவை ஏற்காமல் துவேஷித்தலே பெரும்பான்மையாய் உலகினர்க் கியல்பாகி விட்டதென்றும், அம்மாதிரி இச்சமயத்திலும் ஒரு மஹா புருஷர் அவதரிப்பரேல் அவர்பால் துவேஷத்தைக்காட்டாமல் உலகினர் அவர் வரவை அன்புடனாதரித்தற் பொருட்டு, அத்திருவவதாரம் சமீபத்தில் ஸம்பவிக்கக் கூடியதென்ற முன்னறிவை உலகத்தினர்க்குப் பத்திரிகைகள், கிரந்தங்கள், பிரஸங்கங்கள் மூலமாய்

பிரஸித்தப்படுத்தி, உலகத்தார் விளைக்கும் துவேஷத்தை யெல்லாம் தாமே முன்னேற்றுக்கொண்டு, அவதார புருஷர் வருஞ் சமயத்தில் உலகத்தா ரெல்லாரும் சாந்தர்களாகி ஜகத்குருவின் அநுக்ரஹத்திற்குப் பூர்ணமான பாத்திரவான்களாக வேண்டுமென்றே உதயநக்ஷத்திர ஸங்கத்தார் உழைத்து வருகின்றனரென்றும், தாமும் அச்சங்கத்திற் சேர்ந்தவ ரென்றும் கேட்போர் மனங்களிற் பதியப் பிரஸங்கித்தார்.

* * *

ஸ்ரீமான் ஜினராஜதாஸரும் Mr. கூன்ஸ் என்பவரும் திங்கட்கிழமை பகல் 12-30 மணிக்குக் கொழும்புக்குச் சென்றனர். Mr. கூன்ஸ் இலங்கைத் தீவில் ஒரு வித்யாசாலையின் தலைவராக உத்யோகம் ஒப்புக்கொள்ளப் போகின்றனர்.

* * *

மதுரை பிரஹ்மஞான சபையின் அக்கிராஸனாதிபதியாக அநேக வருஷங்களாய்ச் சிறப்புற்று விளங்கிய பிரஹ்மஸ்ரீ P. நாராயண ஐயரவர்களுடைய மரணத்தால் இப்பத்திரிகைக்கும் பிரஹ்மஞான சபைக்கும் அவர் வாஸஸ்தலமாகிய மதுரை நகர்க்கும் ஒரு மஹத்தான லோபம் ஏற்பட்டது என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். இப்பத்திரிகை அவருடைய முயற்சியால் ஸ்தாபிக்கப்பட்டது. அவருடைய ஊக்கத்தினாலும் விடாமுயற்சியாலும் அது சென்ற $3\frac{1}{2}$ வருஷங்களாக மேன்மேலும் அபிவிருத்திக்குக் கொண்டுவரப்பட்டது, அவரது இடைவிடாத உற்சாகமாகிய பெரும்பாக்கியம் இப்பத்திரிகைக்குக் குன்றியது. பிரஹ்மஞான சபையோரால் இங்கிலீஷில் பிரசுரம் செய்யப்பட்ட பல கிரந்தங்களையும் சஞ்சிகைகளையும் இவர் ஆங்கிலம் தெரியாத தமிழ் தெரிந்தோர்களின் உபயோகத்திற்காக தமிழில் மொழி பெயர்த்து அச்சிட்டு வெளிப்படுத்தி யிருக்கின்றனர்.

* * *

மதுரை பிரஹ்மஞான சபை ஸ்தாபிக்கப்பட்ட சில வருஷங்களுக்கெல்லாம் அவர் மட்டும் அந்தச் சபையில் தனித்த அங்கத்தினராக நின்றனர். அக்காலத்தில் அவர் இவ்வூரில் அச்சபையின் நாமம் அழியா வண்ணம் நடாத்தி வந்தனர். அதற்குப் பிறகு சில

மெம்பர்கள் வந்து சேர்ந்த பின்னர், அச்சபைக்கு ஒரு கட்டிடம் கட்ட ஏற்பாடு செய்து அதற்குத் தான் விசேஷ பொருளுதவி செய்ததுமல்லாமல் பலர் அவர் வேண்டு கோளுக் கிணங்கி அளித்த பொருளுதவியைக் கொண்டும் இடம் வாங்கிக் கட்டிடம் கட்டினர். அவருடைய பிரயத்தனமில்லாவிடின் அக்கட்டிடம் அமைவது அரிது. கட்டிடம் கட்டினதுமல்லாமல், அவ்விடத்தில் ஒரு புத்தகசாலையை (Library) ஏற்படுத்தி அதுமேன்மேலும் விருத்தியாகும் வண்ணம் அதை ஆதரித்து வந்ததால், நமது பிரஹ்மக்ஞான சபையின் புஸ்தக சாலை சகல சமயங்கள் சம்பந்தமாகவும் சர்வ கலைகள் சம்பந்தமாகவும் ஏற்பட்டுள்ள பல கிரந்தங்கள் உள்ளதாய் பேர்பெற்றிருக்கிறது. தென்னிந்தியாவில் பல பிரஹ்மக்ஞான கிளைச் சபைகள் கூடி ஏற்பட்டிருக்கிற மகாசபைக்குள்ளெல்லாம் (Federations, District Conferences) முன்தோன்றிய சபைக்கு (Southern Districts Theosophical Federation) அவர் சென்ற 11 வருஷங்களாக அக்கிராசனாதிபதியா யிருந்தனர்.

* * *

மற்றும் பிரஹ்மக்ஞான சபையின் நேர் சம்பந்த மில்லாதபோதிலும் ஜனங்களின் நன்மையைக் கோருகின்ற பல பிரவிர்த்திகளையும் இவர் அபிமானித்து ஊக்கத்தைக் காட்டி யிருக்கின்றனர். இவர் கல்விகற்று மதுரைக்கு ஐகோர்ட்டு வக்கீல்தொழிலை அப்பியஸிக்க வந்தது முதல் பரோபகார விஷயங்களில் பிரவிர்த்திக்காதகாலம் இல்லை. இவர் Union Club என்ற விச்ராந்திக்குரிய ஒரு சபையின் காரியதரிசியாகவும் மதுரை முனிசிபல் கவுன்சில் மெம்பராகவும், Madura Mail என்றவாரந்தோறும் பிரசுரம்செய்யப்பட்ட ஆங்கிலப் பத்திரிகையின் அதிபராகவும், தர்மசாஸ்திரசபையின் அக்கிராசனாதிபதியாகவும், தமிழ்ச் சங்கத்தின் நிர்வாக சபை அங்கத்தினராகவும், மதுரைத் தாலூகா போர்ட்டு உப அக்கிராஸனாதிபதியாகவும், மதுரை நகர் ஐக்கிய பண்டக சாலையின் அக்கிராஸனாதிபதியாகவும், தர்ம ரக்ஷண சபையின் காரியதரிசியாகவும், மதுரை காலேஜ்போர்டு மெம்பராகவும், மதுரை வித்யா தர்மபரிபாலன சபையின் நிர்வாக

சபை அங்கத்தினராகவும், புது ஜெயில் நான்பீஷல் விஸிட்டராக வும் ஒவ்வொரு காலங்களிலும் உழைத்து வந்திருக்கின்றனர். மதுரை பிரஹ்மக்ஞான சபையைச் சேர்ந்த ஸ்ரீ மீனாக்ஷி வித்யாசாலையின் நிர்வாகசபைக்கு அக்கிராசனாதிபதியாக விருந்து வந்திருக்கின்றனர். இவருடைய சரிதையால் மதாபிமானமும் பரோபகார பிரவிர்த்தியும் ஒத்து வாழ்தலும் வைதிக சிரத்தையானது லௌகிக பிரவிர்த்திகளில் அசிரத்தை உண்டு பண்ணத் தக்கதல்ல வென்பதும் சுவிஸ்தாரமாய் ரூபிக்கப்படுகின்றன. இவர் பரோபகார சீலர் என்பனத நமது இராஜாங்கத்தாரே அங்கிகரித்து Kaisar-i-Hind என்ற வெள்ளிப் பதக்கத்தைப் பரிசளித்திருக்கின்றனர். பிறருக்கு நன்மை செய்வதையே பூஷணமாகக் கைக்கொண்ட P. நாராயண ஐயரவர்கள் மறுபடியும் அவ்வழியிலேயே உழைக்க இப்புவிக்குத் திரும்புவார்களென்றே நம்பலாம். இக்காலங்களில் அவரைப் போன்றவர் அநேகர் தேவையாம்.

***

சென்னை நகரத்தில் உள்ள வித்யாசாலைகளில் உள்ள மாணாக்கர்களின் சங்கியை சுமார் 3000 ஆகின்றது. இவர்கள் இந்துக்களில் பல பிரிவினர்களாயும் இஸ்லாம் மதத்தினரீயும் கிறிஸ்தவசமயிகளாயும் இருக்கின்றனர். இவர்கள் பெரும் பான்மையோர் போஜனம் செய்யும் போஜனசாலைகளும் குடியிருக்குமிடங்களும் சுகாதார சாஸ்திர விதிகளுக்கு விரோதமாக அமைக்கப்பட்டிருப்பது மன்றி அம் மாணாக்கர்களுடைய சரீரப் பயிற்சி, குணாபிவிருத்தி இவைகளுக்கு அநுகூலமான சௌகரியங்களோடு பொருந்தினவைகளாக ஏற்படவில்லை. இக்குறைகளினால் வாலிபர்கள் தேஹபலஹீனர்களாயும் அவர்களில் மனோதிடமில்லாதவர்கள் சகவாஸதோஷங்களுக்குட்ப்பட்டவர்களாயும் இருப்பதை நாம் அடிக்கடி பார்க்கிறோம்.

***

இக்குறைகளை நிவிர்த்திப்பதற்காக இம் மாணாக்கர்கள் விஷயத்தில் அதிக அநுதாபமுற்ற மாதாஸ்ரீ அன்னிபெஸண்டு அம்மையார் சென்னையில் கிறிஸ்தவ வாலிப சங்கம்போன்ற இந்தியர்களுக்குரிய இந்திய வாலிப சங்கம் ஒன்று ஸ்தாபிக்க முயன்று, அதற்கு வயதிலும் வைதிக லௌகிக சிரத்தையிலும் கல்வியிலும் அநுபவ

த்திலும் சிரேஷ்டரான மகா-ா-ா-ஸ்ரீ Sir. S. சுப்பிரமணிய ஐயரவர்கள் அக்கிராஸனாதிபதியாகவும், சென்னை ஐகோர்ட்டு ஜட்ஜி கனம் டியாப்ஜி அவர்கள் உப அக்கிராசனாதிபதியாகவும், சென்னை ஐகோர்ட்டு ஜட்ஜி கனம் C. சங்கரன் நாயரவர்கள் நிர்வாக அக்கிராஸனத்துடனும், ஐகோர்ட்டு வக்கில் C. P. ராமஸ்வாமி ஐயரவர்களும் கனம் V. S. ஸ்ரீனிவாஸ சாஸ்திரிகளவர்களும் காரியதரிசிகளாகவும் கனம் T. V. சேஷகிரி ஐயரவர்களும் இன்னும் சில முக்கிய கனவான்களும் மாதுஸ்ரீ அன்னிபெஸண்டு அம்மையாரும் நிர்வாக சபையின் அங்கத்தினர்களாகவும் உடையதாக இந்தியவாலிப சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது.

* * *

இந்திய வாலிப சங்கமானது பகிரங்கமாக ஸ்தாபிக்கப்பெற்று முடிவு பெறு முன்னமே, மாதுஸ்ரீ அன்னிபெஸண்டு அம்மையாரின் மீது துவேஷத்தை இடைவிடாமல் வெளிக்காட்டுகின்ற சென்னையில் பிரசுரமாகும் 'இந்து' பத்திரிகையானது உலக சம்மதமான 'இந்து வாலிப சங்கம்' அநாவசியம் என்றும் அதில் மாதுஸ்ரீ அன்னிபெஸண்டு அம்மையார் சம்பந்தப்பட் டிருப்பதால் அது ஒப்புக்கொள்ளத் தக்கதில்லை யென்றும் விபரீதமும் நியாய விரோதமுமான அபிப்பிராயங்களை வெளியிடத் தொடங்கினது. இதற்குப் பின்னர் கனம் C. சங்கரன்நாயரவர்களும் கனம் V. S. ஸ்ரீனிவாஸ சாஸ்திரிகளவர்களும் கனம் T. V. சேஷகிரி ஐயரவர்களும் நிர்வாக சபையில் அவர்கள் ஒப்புக்கொண்ட ஸ்தானங்களிலிருந்து விலகிக் கொண்டனர். இவர்கள் இவ்விதம் வாலிபர்களுடைய நன்மைக்கு அநுகுணமான சபையின் நிர்வாகத்திலிருந்து என்னகாரணத்திற்காக விலகிக் கொண்டார்களோ அக்காரணத்தை அவர்கள் இன்னும் வெளியிடவில்லை. அக்காரணத்தை அவர்கள் இதுவரை வெளியிடாததால் அது ஒப்புக்கொள்ளத் தக்கதோ என்பதில் சந்தேகம் ஏற்படுகிறது.

* * *

உலகத்தில் நல்லபிரவிர்த்தி ஆரம்பமாகில் அதில் நாம் சேர்ந்துகொள்வது நம் பாக்கியம் என்று கருதுவதே உண்மையும்

மேன்மையு மானநிலை. அதிலிருந்து நாம் விலகினால் அது பிறர் மூலமாய் முற்றுப் பெறக்கூடியது என்று சரித்திர ஆராய்ச்சி மூலமாய் அறியலாம். இந்தியாவில் பொதுவிஷயங்களை ஒன்றுசேர்ந்து முடிப்பதில் நம்மவர்கள் அப்பொது விஷயங்களுக்கு விலக்கான அபிப்பிராய பேதங்களை முகாமையாக ஏற்படுத்திக்கொண்டு அப்பொது விஷயங்கள் முடிவு பெறுவதில் இடையூறுகள் ஏற்படுத்திக் கொள்வது சர்வ சாதாரணமென்று நமது தேச சரித்திர ரூபமாகவும் தற்காலங்களில் கிராம வர்த்தமானங்களாலும் ஸ்பஷ்டமாக நமக்குத் தெரிகிறது. இந்தக் குணதோஷமானது சென்னையிலும் இந்திய வாலிப சங்க சம்பந்தமாய் உண்டாயிருந்தால், பச்சிம தேசத்தவர்களாகிய ஐரோப்பியர்களின் ஸஹவாஸத்தால் கூட நமக்குள் ஐக்கியம் இன்னும் ஏற்பட வில்லையென்று நன்றாகத் துலங்குகிறது. ஆகிலும் இந்திய வாலிப சங்கம் ஸ்தாபிக்கப் பெற்று மேன்மேலும் விருத்தியாகுமென்று நாம் நம்புகிறோம்.

* * *

தமிழ் நாட்டில் உள்ள பிரஹ்மஞானக் கிளைச் சங்கங்கள் வாரந்தோறும் கூடும் மீட்டிங்குகளையும் அதில் நடக்கும் உபந்யாஸங்கள் முதலிய வேலைகளையும் ஒரு மாசத்திற்கு முன் நமக்கு அறிவித்தால் அவைகளை ஒரு அட்டவணையாகக் கண்டு நம்முடைய மறுமாசப் பத்திரிகையில் பிரசுரம் செய்யலாகும். இவ்வித அட்டவணை இங்கிலாந்தில் பிரசுரமாகும் 'வாஹன்' பத்திரிகையில் வெளியிடப்படுகின்றது. அதினால் ஒவ்வொரு கிளைச்சங்கத்தின் பிரவிர்த்தியும் அதற்குப்புறம்பான விடங்களிலுள்ளவர்களுக்குத் தெரியவருவதுமல்லாமல் தமிழ் நாட்டில் உள்ள சங்கங்களுக்குள்ளும் ஐக்கிய பாவம் அதிகரிக்கும் என்பதில் ஐயமில்லை.

* * *

மாதுஸ்ரீ அன்னிபெஸண்ட் அம்மையாருக்காக பிரிவி கவுன்ஸிலுக்கு மறுப்போட்டிருந்த பிரகாரம் Mr. நாராயண ஐயரின் குமாரர்கள் விஷயமாக பிரிவி கவுன்ஸிலில் தீர்மானம் செய்யும் வரைசென்னை ஹைக்கோர்ட்டார் மேற்றொன்றும் கேஸ் மேல் நடத்தக் கூடாதென்று (Order of stay of Execution) அனுமதி கிடைத்திருக்கிறது.

அ. ரங்கஸ்வாமி ஐயர்.

காலஞ்சென்ற நமது பத்திராதிபர் பிரஹ்மஸ்ரீ
ப. நாராயண ஐயரவர்களின்
சரித்திரச் சுருக்கம்.

மதுரைமா நகருக்கே ஒரு திலகம்போல் விளங்கியவரும், ஞான ஜனகர்தான் உருவெடுத்து வந்தனரோ அல்லது ஸத்ய ஒழுக்கம் என்னும் குணந்தான் மூர்த்திகரித்து உலாவினதோ என்று யாவரும் வியக்கத்தக்கவருமாயிருந்த பிரஹ்மஸ்ரீ ப. நாராயண ஐயரவர்கள் இந்தப்பிரமாதீச௵ தை௴ 12௳ (25—1—14) ஆதிவாரம் பகல் 3½மணி சுமாருக்கு இக்கர்ம லோகத்தை நீத்து சிவலோகத்தை யடைந்தனர். இவர் வேதியர் குலத்தில் பிரஹசரண வர்க்கத்தைச் சேர்ந்தவர். ஹரித கோத்திரத்திலுதித்தவர். இப்பெரியாருடைய முன்னோர்கள் தஞ்சாவூர் ஸமஸ்தானத்தைச் சேர்ந்த இப்பிராஜ புரத்தில் பெரிய குடித்தனமுள்ளவர்களா யிருந்தவர்கள். சுமார் இருநூறு வருஷங்களுக்குமுன் இராஜாங்கக் குழப்பத்தில்தஞ்சாவூரைவிட்டுத் தக்ஷிண திக்கை நோக்கி இராமநாதபுரம் ஸேதுபதியவர்களுடைய இராஜ்யத்தில் ஐந்தில் இரண்டு, ஐந்தில் மூன்று பாக பிரிவினையாவதற்குமுன் முத்துவிஜய இரகுநாத ஸேதுபதி அவர்கள் காலத்திற்கு (அதாவது கி. பி. 1733-ம் வருஷத்திற்கு) முன்னமே குடியேறினவர்கள். இராமநாதபுரம் ஸேதுபதியவர்களிடம் எளமனூர், முத்துவர்ணபுரம், வாணி முதலிய கிராமங்களில் தர்மாஸனமாக பூஸ்திதிகள் பெற்றவர்கள். நாராயண ஐயரவர்களின் தந்தையாகிய நாகுவையவர்கள் முதலில் பரமக்குடி முனிசீப்கோர்டிலும் 1863-ம்௵ வாக்கில் திண்டுக்கல் முனிசீபுக் கோர்ட்டிலும் பிறகு திருப்புவனத்தில் ஸ்தாபிக்கப்பெற்றிருந்த அடிஷனல் முனிசீபுக் கோர்ட்டிலும் ஹெட்குமாஸ்தா உத்தியோகத்தை வகித்தவர்கள். பிறகு நாகுவையரவர்கள் துவாதசாந்த க்ஷேத்திரமாகிய இம்மதுரை நகரில் வக்கீல்ஸன்னது பெற்று முனிசிபுக் கோர்ட்டுகளில் வக்கீலாகப்பயின்று, அந்தக் காலத்திலேயே மாதம் ஒன்றுக்கு ரூ 500-க்குக் குறையாமல் ஸம்பாதித்துக்கொண்டு மதுரையில் ஒரு பிரஸித்தரானார். நாகுவையர் தாம் ஈட்டிய

பொருளை தம் சகோதரர்களுக்கும், சுற்றத்தாருக்கும், மற்றும் பிறர்க்கும் உபகாரமாகும்படி செலவழித்து, மஹா தர்ம சிந்தையுள்ளவராய், ஏழைப்பையன்களை வித்யாலாபமடையும்படி போஷித்துப் பொருளுதவிசெய்தும், பிராமணர்களுக்கும் மற்றவர்களுக்கும் தம்மாலியன்றமட்டும் வேண்டியவுதவிகளைச் செய்துகொண்டும் விளங்கினர்.

தாது, ஈசுவரவருஷப்பஞ்சத்தில் கஞ்சித்தொட்டி தாமேவைத்து கூவி இரக்கும் ஏழைகளுக்குத் தம் கையால் கஞ்சி ஊற்றி அநேகரைக் காப்பாற்றினர். அவருக்கு, அதிர்ஷ்ட வசத்தால், அவரது தர்மத்தைப் பரிமளிக்கும்படி செய்யத்தக்க ஸஹதர்மசாரிணீ என்றழைப்பதற்குப்பாத்திரமானவரும், நற்குணக்குன்றெனத்தக்கவருமான பார்வதம் அம்மாள் பத்நீயாக அமைந்தார். அம்மாதின் ஊக்கத்தையும், சீலத்தையும், பரோபகாரத்தையும், ஜீவகாருண்யத்தையும் பின்னும் மற்ற நற்குணங்களையும் விரிவாய் எடுத்துரைக்கின் இப்பத்திரிகை இடங்கொடாதாகையால் இங்குச் சுருக்கமாய்ச் சொல்வதே ஏற்றதாகும். “தாயைப்போன்றது பிள்ளை, நூலைப்போன்றது சேலை” என்ற முதுமொழிப்படி, இம்மாதிரி உத்தம தம்பதியினிடமாக ஜநித்த புத்திரரான நமது நாராயண ஐயரவர்கள் தர்மிஷ்டராயும் ஞானியாயுமிராமல் வேறெவ்விதமாயிருத்தல்கூடும்.

பிரஹ்மஸ்ரீ நாராயண ஐயர் பிங்கள வருஷ மார்கழி மீ 18௳ (1857 வரு டிசம்பர் மீ 31-ம்௳) வியாழக்கிழமைதினம் மானமதுரைக்கடுத்த கீழப்பசலையில் மாதாமஹரவர்கள் கிருஹத்தில் பிறந்தார். பிறந்த சமயமோ, நமது தேசத்தில் மிகத்தொந்தரையான கலகம் உண்டாகியமர்ந்து, நம் தேசத்திற்கு உபரியுபரி க்ஷேமத்தைப் பயப்பதற்கு காரண பூதரான கருணை தங்கிய விக்டோரியா மஹாராணியவர்களால் “இந்தியர்களை ஜாதி மதவர்ண பேதமின்றி அவர்களுக்குத் திருப்தியும் க்ஷேமமுமுண்டாகும்படி அரசாளுவோ”மென்று வெளிப்படையான விளம்பரம் (The Great Proclamation) ஏற்படத்தக்க சமயமாயிருந்தது. அதனாலேயே இம்மஹா புருஷனுடைய உற்பத்தியினால் உலகத்திற்கு க்ஷேமம் உண்டென்பது சூசிக்கப்பெற்றதுபோலும். நாராயண ஐயருடைய இளமைப்பருவத்தில் கல்விப் பயிற்சியானது பிரதம பரீக்ஷையான மெற்றிகுலேஷன்

வரை மதுரையில் ஜில்லா ஸ்கூல் என்ற பாடசாலையில் நடைபெற்றது. ஷெ பள்ளிக்கூடத்தில் படிக்கும் காலத்திலேயே 'விளையும் பயிர் முளையிலே' என்றபடி நமது ஐயரவர்கள் நல்லொழுக்கமுள்ளவராயும், காரியத்தில் கண்ணூற்றவராயும் எவ்விதத்திலும் குற்றங்குறை அற்றவராயும் நடந்துவந்தாரென்று அவருடன் சகபாடிகளாயிருந்த சிநேகிதர்கள் இப்போதும் வியந்து சொல்லுகிறார்கள். மெற்றிகுலேஷன் பரீக்ஷையில் 1874-ம் வருஷத்தில் மதுரையில் முதல்கிளாஸில் தேர்ந்தார். வெகு விலையுள்ள அநேக புஸ்தகங்களைப் பரிசுபெற்றார். பிறகு எப். ஏ. பரீக்ஷைக்கு வாசிக்க அப்போது மிகப் பிரஸித்திபெற்ற கும்பகோணம் கலாசாலைக்குப் போய் அங்கு இரண்டு வருஷம் போர்ட்டர் (Porter) என்னும் வித்வச் சிரேஷ்டருடைய ஆதரவின் கீழ் கல்விகற்று எப். ஏ. பரீக்ஷையிலும் முதல் கிளாஸில் தேறினர். அப்போதே பின்னிட்டு அவருக்கு ஆப்த ஸ்நேஹிதர்களான கனம் ஹைகோர்ட் ஜட்ஜ் டி. ஸதாசிவ ஐயரவர்கள், ஸப்ஜட்ஜாயிருந்து காலஞ்சென்ற வி. ஸ்வாமிநாத ஐயரவர்கள் அவர்கள் சகோதரர் காலஞ்சென்ற கனம் வி. கிருஷ்ணஸ்வாமி ஐயரவர்கள் ஸி. எஸ். ஐ. இவர்களுடைய பால்ய ஸ்நேஹம் நேர்ந்து, மேன்மேலும் அந்த ஸ்நேஹம் விருத்தியடைந்து வந்தது. அப்பால் மதராஸ் பிரெஸிடென்ஸி காலேஜில் தாம்ஸன் (Mr. Thompson) என்ற ஆங்கில பாஷை நிபுணரிடமும், டாக்டர் வில்ஸன் (Dr. Wilson) என்ற ரஸாயன சாஸ்திரியிடமும் கல்விகற்று பி. ஏ. பரீக்ஷையில் வெகு சிலாக்கியத்துடன் 1879 வருஷத்தில் தேர்ந்தார். ரஸாயன சாஸ்திரத்திலும், பூதசாஸ்திரத்திலும் சென்னை ராஜ்யத்திற்கே முதன்மையாய்த் தேறியதற்காக ஆரணி ஜாகிர்தாரால் ஸ்தாபிக்கப்பெற்ற தங்கப் பதக்கப் பரிசைப் பெற்றார். பிறகு பி. எல். பரீக்ஷையும் தேறினர்.

அப்பால் சென்னையில் பிரஸித்திபெற்ற ஹைகோர்ட் வக்கீல் பாலாஜிராயரவர்களிடம் வேலை கற்றுக்கொண்ட பின்னர் ஹைகோர்ட் வக்கீல் சன்னது பெற்று மதுரையில் 1883 வரு முதல் ஹைகோர்ட் வக்கீலாகப் பயின்றார். இவர் கல்விகற்பதைப் பரீக்ஷை முடிந்தவுடன் பள்ளிக்கூடத்தோடே விட்டுவிட்டவரல்லர். பொழுது போக்கென்றால் புஸ்தகமும் கையுமாயிருப்பது தான் இவர் நோக்கம். கோர்ட்டுகளில் வேலை செய்யும் நேரம்தவிர காச்

கும்படி ஏற்படும் நேரங்களிலும் ஏதேனும் நல்ல விஷயங்களடங்கிய புஸ்தகம் ஒன்றை வைத்துக்கொண்டு கவனமாய் வாசிப்பார்.

அப்படிக் கற்கும் விஷயங்களை நன்றாய்ச் சிந்தித்து மனப்படுத்திக்கொள்ளும் தன்மையுள்ளவர். அப்படிக் கணப்பொழுதையும் பழுதாக்காமல் காலத்தை உபயோகமாய்க் கழித்து வந்த பழக்கத்தால் இவர் மிக்க கல்விப்பயிற்சி யுள்ளவராயினர். அவ்விதம் கற்ற விஷயங்களின் முக்கிய அம்சங்களை அநுஷ்டானத்திற்குக் கொண்டு வந்த தீரராவார் இவர்.

கற்க கசடறக் கற்பவை கற்றபி
னிற்க வதற்குத் தக.

என்ற குறளைப் பயன்படும்படி நிதர்சனமாய் ஒழுகிக் காட்டியவர் இவரே.

இவர் வக்கீல் உத்யோகம் செய்ய ஆரம்பித்தது முதல் இவரது புத்திக் கூர்மையாலும் சுறுசுறுப்பினாலும் அதி சீக்கிரத்தில் மிக்க ஸாமர்த்தியமுள்ளவரெனப் பேர்பெற்று, அவர் காலத்திலுள்ள மதுரை வக்கீல்களுள் முதன்மையானவரெனப் பிரஸித்தி பெற்றார். வரும்படியும் மேன்மேலும் விருத்தியாகிக்கொண்டு வந்தது. கட்சிக்காரர்களுக்காக நியாயமாய்ச் செய்யவேண்டிய வேலையில் சிறிதேனும் தயங்கார். தான் செய்த வேலையை ஈசுவரனுக்கும் தன் மனச்சாக்ஷிக்கும் பயந்து செய்தாரேயொழிய மனிதனுடைய தயவையாவது பயத்தையாவது எதிர்பார்த்துச் செய்தவரல்லர். கேஸ் தோல்வியானால், கட்சிக்காரருடைய துரதிர்ஷ்டத்தாலாவது, கேஸின் ஸ்வாபாவிக துர்பலத்தாலாவது தோற்க வேண்டுமேயொழிய வக்கீலுடைய அசட்டையால் அல்லது சாமர்த்தியக் குறைவால் தோல்வியடைந்த தென்பது இவரேட்டில் ஏற்பட்டதேயில்லை. இவருடைய கல்வித்திறனும், பொது நன்மையில் ஊக்கமும், கட்சிவாதத்தின் பெருமையும், இவரது தமிழ்ப் பாஷையின் நுண்ணறிவும், இவரது உழைப்பும், விடாமுயற்சியும், தீரத்துவமும், சாஸ்திரப் பிரக்ஞையும் மிகவும் புகழத்தக்கவை. ஜடிதியில் நிரடான விஷயங்களைப் படித்துத் தெரிந்ததுமன்றி, அதில் பல ஆண்டு பழகின வித்வான்களைக் காட்டிலும் அதிகமாய்த் தெரிந்து கொண்டவரெனப்

பிறர் புகழும் வண்ணம் உபயோகப்படுத்தும் கூரிய புத்தித்திறனையும் உடையவர். 1898௵த்திய 33 நம்பரில் கீழ்மதுரை சப்கோர்ட்டில் நடந்த கழுதிக் கோவில் கேஸில் அவை நன்றாய்ப் பிரகாசித்தன. இவர் வக்கீலாய்ப் பயின்றது சுமார் 20 வருஷந்தான். ஒரு ஆச்சரியமென்ன வென்றால் இவர் வக்கீல் தொழிலை ஆரம்பித்த காலத்திலேயே 20 வருஷம் மட்டும் பயின்று பின் விட்டு விடுவதென்றே ஸங்கல்பித்துக் கொண்டார் என்பதே. ஸங்கல்பப்படியே நடந்து காட்டினர்.

கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவ
னற்றா டொழாஅ ரெனின்

என்ற குறளின் நோக்கப்படி மிகுந்த தெய்வபக்தியும் வைதிக சிரத்தையுமுள்ளவர். உள்ளன்போடு உருக்கமாய் ஈசனைத் தொழுது வழிபடுபவர். குடும்பத்திலிருந்து கொண்டே ஒரு கிருஹஸ்தன் ஞான மார்க்கத்தைக் கைக்கொண்டு முக்தி பெறுதற்குப் பாத்திரவானாகலா மென்று நிதர்சனமாய்க் காட்டியவரென்றே யிவரைக் கூறலாம். முற்கூறியபடி ஜனகருக்கிவரை யொப்பிடுவதும் பொருந்தியதே. பிரபஞ்ச விஷயங்களிலிருந்தவராயினும் தாமரையிலையிலுள்ள நீர்த்துளிபோல் பற்றற்றவராயும் உலக நடையிலிருப்பவர் போலும் நடித்துக்காட்டிச் செய்யும் கார்யங்களை யெல்லாம் ஈசுவரார்ப்பணம் செய்தவர்.

இவர் மஹா ஜீவகாருண்ய முள்ளவர். கருணாநிதி. பகைவனாயிருந்தாலும்கூட எவருக்கும் தீங்கிழைத்தல் இன்ன தென்பதே யிவருக்குத் தெரிய வராது. ஸ்ரீமானாயிருந்தாலும் சரி, ஏழையாயிருந்தாலும் சரி, கறுத்த வர்ணத்தானாயினும், வெள்ளை வர்ணத்தானாயினும், பிராமணனாயிருப்பினும், சண்டாளனாயிருப்பினும் எல்லோரிடத்திலும் ஒரே வித அன்பு பாராட்டும் தன்மையுள்ளவர். எல்லோரும் பரப்பிரஹ்மத்தின் ஸ்வரூபங்களெனும் தெளிவுள்ளவர். இவர் மிக்க ஈகையும் தர்ம சிந்தையு முள்ளவர். இவர் இல்லம் ஒரு அன்ன சத்திரம் என்றே சொல்லலாம். அதிதிகள் யாவராயினும் இவர் அகத்தில் அன்னம் அருந்தாமற் போகார். பிராமணன், சூத்திரனென்ற வித்தியாஸ மின்றி யாவர்க்குமிடுந் தன்மையுள்ள

வர். காஷாயந் தரித்த பரதேசியோ, விபூதி ருத்திராக்ஷ மணிந்த பண்டிதனோ, தலையில் சடை பூண்ட கோஸாயியோ, கர்ண குண்டலம் தரித்த தீக்ஷிதரோ, தண்டகமண்டலு தாரியான ஸந்யாஸியோ, வேத வேதாந்த கலைகற்ற விப்பிரரோ, நவீனக் கல்விப்பட்டங்கள் பெற்ற வித்வான்களோ, தமிழ் மட்டும் கற்ற வித்துவான்களோ, பிரஹ்மக்ஞான மென்ற (Theosophy) தியாஸபியில் ஆழ்ந்த புத்தியுள்ள மஹான்களோ, லோகக்ஷேமார்த்தம் பாடுபடும் கனவான்களோ, எவர் இந்நகர்க்கு வந்தாலும் இவர் அகத்துக்கு வந்து இவரால் உபசரிக்கப்படாமல் போகார்.

ஆர்க்கு மிடுமி னவரிவ ரென்னன்மின்
பார்த்திருந் துண்மின் பழம்பொருள் போற்றன்மின்
வேட்கை யுடையீர் விரைந்தொல்லை யுண்ணன்மின்
காக்கை கரைந்துண்ணுங் கால மறிமினே—திருமந்திரம்.

என்ற பாவின் உட்கருத்தை அநுஷ்டித்துக் காட்டினவர் இவரே.

இவரை வித்யாநிதியென்றே சொல்லலாம். மதுரை நகரில் இராஜாக்களில்லாத குறைவினால் வித்வான்களுக்கு ஆதரவு ஏற்படுதற்கிடமில்லாதது பற்றி இவர் அவ்விஷயத்தில் துரந்தரராயிருந்து வித்வத்வத்தை சிறப்பிப்பதற்கு மிக்க முயற்சித்துள்ளார். எந்த வித்வான் வந்தாலும் சபைகூட்டிவைத்து வித்வானைப் பிரகாசிப்பித்து ஜனங்களுக்கு வித்யையின் பலனையுண்டுபண்ணியும் வித்வான்களுக்குத் தம்மாலியன்றபொருளுதவி செய்வதுமன்றி, பிறர்க்கும் தூண்டுகோலாயிருந்து அவர்களையும் உதவி செய்யும்படிசெய்வார். பொதுவாய் ஜனங்கள் படித்துக்கடைத்தேறவேண்டுமென்ற நோக்கத்துடன் மதுரையில்பிரஹ்மக்ஞான மந்திரமென்று பிரஹ்மக்ஞான ஸபைக்கு ஒரு வீடு-வாயிலை யுண்டுபண்ணியும் நானா சாஸ்திரங்களிலும் நானா பாஷைகளிலும் சிறந்த புஸ்தகங்களை யெல்லாம் தன் சொந்தத்தில் மிகச் செலவு செய்தும், மற்றவர்களையுந் தூண்டி அவர்களிடமிருந்து பொருளுதவி பெற்றும் ஒரு பெரும் புஸ்தக சாலையை யேற்படுத்தி யுள்ளார். யாவரும் வந்து வாசியுங்கள், புத்தியை விசாலப்படுத்திக் கொள்ளுங்கள், கடைத்தேறுங்கள் என்று ஒவ்வொருநாளும் கூறியதுபோல் நடந்தனர். மதராஸ், மைஸூர், திருவனந்தபுரம்

இம்மூன்று துரைத்தனத்தார்களும் மதுரை பிரஹ்மஞான சபைப் புத்தக சாலைக்கு, பத்திராதிபருக்குக் கொடுக்கும் புத்தகவிதவிகளைச் (Privileges of the Editor's Table) செய்து வருகிறார்கள். பொது நன்மையான பலவித காரியங்களிலே இவர் தலையிட்டு வேலை செய்து வந்திருக்கிறார். மதுரை ஹிந்துசாசுவத நிதியின் ஸ்தாபகர்களில் இவர் ஒருவராயும், அதன், நிர்வாக ஸபையின் துவக்கமுதல் வெகு வருஷங்களாய் பிரஸிடெண்டாகவும் இவர் இருந்திருக்கிறார். இவருடைய கடைசிக்காலம் வரையிலும் இவர் இந்நிதியின் நிர்வாக ஸபை டைரெக்டர்களில் ஒருவராயிருந்தார். இவர் பெயர் சம்பந்தமுள்ளது என்றால், அது சரியானது, அது நம்பத்தக்கது, என்ற நம்பிக்கை ஜநங்களுக்கு உள்ளங்கை நெல்லிக்கனி போல விளங்கும். இவர் மதுரைத் தாலூகாப் போர்டு மெம்பராகவும் வைஸ்பிரஸிடெண்டு (Vice President) ஆகவும் வெகு வருஷங்களாய் தீவ்ரமாய் உழைத்திருக்கிறார். பிரஸித்தி பெற்ற டிப்டிக் கலெக்டர் தில்லைநாயகம் பிள்ளையவர்கள் காலத்தில் கிராமாந்தரங்களில் அநேக ரஸ்தாக்களைப் போடும்படி செய்திருக்கின்றனர். மதுரை டிஸ்டிரிக்டு போர்டு மெம்பராகவும், மதுரை முனிஸிபல் கவுன்ஸிலராகவும் இருந்து ஜநங்களின் பொது நன்மைக்குப் பாடுபட்டிருக்கின்றனர். இவ்வூர் ரயில்வே ஸ்டேஷனுக் கருகில் மங்காத புகழுடைய மங்கம்மாள் சத்திரக் கட்டிட மாளிகைகள் இவருடைய முக்கிய முயற்சியால் உண்டானவைகளே. இவர் சிறந்த தேசாபிமானி, காங்கிரேஸ்மஹா ஸபையில் விசேஷ சிரத்தையுடையவர், பிராட்லா மஹான் இடிமுழக்கம்போல கர்ஜித்து உருக்கத்துடன் பேசிய 1889-ம் ஹு த்தில் பம்பாயில் கூடிய 5-வது காங்கிரேஸ் ஸபைக்கு ஐயரவர்கள் போயிருந்தனர். மதராஸ் காங்கிரெஸ்களிலும் இருந்திருக்கிறார். மதுரை ஜில்லா மஹாஜந ஸபையிலும், மதுரை விக்டோரியா எட்வார்டு லைப்ரரி புஸ்தக சாலை கமிட்டியிலும், அங்கத்தினராயிருந்து ஊக்கத்துடன் வேலை செய்தவர். மதுரை டெம்பரன்ஸ் (Temperance) சங்கத்திலும் மிகவும் உழைத்தவர். மதுரை யூனியன் கிளப் காரியதரிசியாயிருந்தார். அக்காலத்தில் புத்திக்குத் தெளிவு உண்டு பண்ணுவதற்கான பிரஸங்கங்களும் வியாஸங்களும் நடை பெறும்படி செய்தவர். மதுரை காலேஜ்

போர்டில் (Madura College Board) ஆதிமுதல் அங்கத்தினரா யிருந்து வந்தனர். புதுஜெயிலுக்கு நானபீஷல் விஸிட்டராக (Nonofficial Visitor) அநேக வருஷங்களாக இருந்திருக்கிறார்.

நமது நாட்டில் நாஸ்திகம் புகுந்து ஹிந்துமதம் தப்பான மதமென்று நம்மவர்களுள் ஆங்கிலம் பயின்ற சிலபுத்திமான்கள் நினைப்புக்கொண்டு மதி மயக்கமாயிருந்த காலத்தில் நமது ஸநாதந தர்மத்தின் சிலாக்கியதையை யெடுத்துக் காட்டி நாஸ்திக மதத்தையொட்டி ஆஸ்திக மதத்தை ஸ்தாபித்த ஆல்காட் பெருமானாலும், ஹெலிநாம் பாளம்மையாராலும் ஸ்தாபிக்கப் பெற்ற தியாஸபி என்னும் மார்க்கத்தில் ஐயரவர்களுக்கு தீவ்ரமான புத்தியும் பக்தி சிரத்தையும் பிறந்தன. அவர் வக்கீல் வேலை தொடங்கினது முதலே தியாஸபியையும் கைக்கொண்டவர். வக்கீல் வேலையாயிருக்கும்போதே தியாஸபி ஸம்பந்தமாய்த் தினந்தோறும் படித்தல், சிந்தித்தல், தியானித்தல், நிருபம் எழுதல் முதலிய முயற்சிகளில் சுமார் 2 அல்லது 3 மணி நேரம் கழித்துவந்தார். தியாசபியில் திடமான பக்தியுள்ளவர். ஐயரவர்களுடைய தியோஸபியிற் பயிற்சியானது, வக்கீல் தொழிலை விட்டபின்னர் இவருக்குப் பெருந்தோழனாக ஏற்பட்டது.

(இன்னும் வரும்)

P. N. நாகநாத ஐயர்.

நன்மொழி.

1. பிரஹ்மக் ஞான தர்சநம் உபதேசிக்கும் முதற் படிப்பினை யென்னவெனின், ஒவ்வொருவரும் அறநெறி வழுவாது, எவ்விதச் சங்கடங்கள் நேரினும், அவற்றை யெதிர்த்து ஸ்வதர்மத்தைத் (தத்தமக் கேற்பட்டுள்ள கடமையை அதாவது, உத்தரவாதத்தை) கொண்டு செலுத்த வேண்டுமென்பதே.

2. பஞ்சேந்திரிய விஷயங்களுடன் மனத்தைச் செல்லவிட்டு விவேகத்தை யிழப்பவன், ஸமுத்திரத்தில் புயற்காற்றால் தத்தளிக்கும் கப்பலுக் கொப்பாவான்.

ஸ்ரீ ப. நாராயண ஐயர் அவர்கள் பேரில்

இரங்கற்பாக்கள்.

நாட்டார் புகழு மன்பா! நண்ப! நாரா யணனே!
ஈட்டும் பொருள்பல் ஞானம் எளியோர்க் குதவி நல்லோர்
கோட்டி யன்பாற் கூட்டிக் குவல யத்தோர் மகிழ
வீட்டின் நெறிகள் ஊட்டி வித்தை விரும்பச் செய்தாய்.

நீற்று லொளிர்நெற் றியையும் நிறைநெஞ் சினையுங் கொண்ட
சீற்ற மில்லாச் சீலா! செம்மை நெறிகள் பூண்டு
ஆற்ற லுடனே அன்பும் அருளும் காட்டி நாட்டார்
ஏற்ற மடையும் வண்ணம் இன்புற் றுழைத்த மேலோய்.

பொய்யா விரதம் பூண்ட புனித நடையோய் புகழார்
ஐயா! உன்போ லெவர்தாம் அவனி யுள்ளோர் உய்ய
மெய்யா யுழைத்தே யன்னோர் மேன்மை யடையும் வண்ணம்
செய்யா மற்செய் யுதவி செய்தே போந்தார் சீராய்.

மதுரை மகிழ்மா மணியே! மாண்பார் குணத்தின் அணியே!
சதுர வருணத் தார்க்குஞ் சமமாய் நடந்த சான்றோய்!
மதுர மொழியாள் பவனே! மன்னர் பரிசு பெற்றோய்!
முதுமை ஞானக் குறளை மொழிபெ யர்த்த மூத்தோய்.

மின்னூர் புரிநூல் மார்பா மேலோர் மெச்சும் வண்ணம்
அந்நாள் ஹைக்கோர்ட் வக்கீல் ஆகிப் புகழ்பெற் றுயர்ந்தோய்
இந்நாள் எழுபே ரவைகள் ஏற்றம் பெறவே யுழைத்த
செந்நாப் புலவ ரேறே! சீரார் செல்வச் செம்மால்.

புண்ய கால முன்னிப் புகழ்வீ டுமன்றன் னுயிரை
விண்ணோர் புகழ்ந்து போற்ற விரும்பித் தாங்கி னற்போல்
மண்ணில் நீயுன் னுயிரை மாந்தர் போற்றத் தாங்கி
நண்ணும் பருவம் நாடி நம்பன் பதஞ்சேர்ந் தனையோ.

சந்த்ரோ தயப்பத் திரிகை சர்வ சமயத் தோரும்
சிந்தை மகிழ நடத்திச் சீருஞ் சிறப்பு முற்றாய்
புந்தி பூர்வ மாகப் போதஞ் செறிந்த நூல்கள்
விந்தை யுறநீ யியற்றி வெளியிட் டொளியுற் றனையே.

வேறு.

அரிதகோத் திரத்தைச் சார்ந்த ஆர்யநா கேசுவ ரையன்
புரிதவத் தாலே போந்த புதல்வனு ராய ணையன்
பரிபவஞ் சோர்வு நீத்துப் பாங்குறப் பலநூல் கற்று
அரியபொற் பதக்கம் பெற்றே ஆன்றவர் புகழ்க்கா ளானன்.

கற்புடை மனைவி யோடுங் களிப்புறத் தருமந் தாங்கிச்
சற்குண மக்க ளெட்டுந் தக்கசம் பத்தும் பெற்றுப்
பொற்புறு நடையி னாலே பூவினிற் புகழும் பேரும்
அற்புத மாகத் தேடி ஐம்பத்தா றாண்டு வாழ்ந்தே.

சாலிவா கனசு காப்தஞ் சார்ந்தவா யிரத்தெண் ணூற்று
நாலொன்ப தாண்டுத் தையில் ஞாயிற்று நாள மாவில்
மாலைமுன் றரைம ணிக்கு மாண்புநா ராய ணையன்
சோலைசூழ் ஆல வாயில் சுந்தரன் பதஞ் சேர்ந்தான்.

எஸ். சாமிநாதையர்.

நன்மொழி

---

3. அஹங்கார மமகாரங்களுடன் கூடிய ஆசைகளை, அதாவது தன்னலம் தோய்ந்த ஆசைகளை முற்றும் ஒழித்து பிறர் நலம் பற்றிய ஆசைகளைக் கொண்டு வாழ்பவர் பற்றற்று வாழ்பவர் ஆவர். அவர்களுக்குத் தான் நிஜ ஆநந்தம் உரித்தானது.

4. உலகில் ஜநித்திருக்கும் மனிதர்களுக்கெல்லாம், அவர்கள் ஒவ்வொருவர் நாவிலும் கோடரி யொன்றும் அமைந்துளது. அறிவின்மையால் பிறரைக் கடிந்து பேசுகிறோமென்ற நினைப்புடன் தீய சொற்களைப் பேசுங்காலெல்லாம், அக் கோடரியால் ஒருதாம் வெட்டுண்ணுகிறார்கள்.

பிரஹ்மக்ஞான தர்சநம் (பாலபாடம்.)

(328-ம் பக்கத் தொடர்ச்சி.)

9-வது அத்தியாயம்.

இரசவாதம்.

இரச வாத மென்பது குப்த வித்தை. இரகசியமாய் உருக்கு தல் என்பது அதன் பொருள். இற்றைக்கு அநேக ஆயிர வருஷங்களுக்கு முன்னரே தொடங்கி இக்காலம் வரை இரசவாதிகள் இருந்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள் மிகவும் சமர்த்தர்கள். நன்றாய்ப் படித்தவர்கள். ஒரு உலோகத்தை மற்றொரு உயர்ந்த உலோகமாக மாற்றும்படியான பெரிய இரகசியத்தை யறிய முயற்சிப்பதில் அவர்களுடைய வாழ்நாளைப் போக்குகிறார்கள். கீழான சாதாரண உலோகங்களைத் தங்கமாக மாற்ற அவர்கள் முயற்சிசெய்து வந்தார்கள். இப்போதும் முயற்சிக்கிறார்கள். அவர்களுடைய செய்கைகளைப் பற்றி விநோதமும் பயங்கரமுமான அநேக கதைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. ஏனென்றால் அவர்கள் படித்தவர்களாகவும் சமர்த்தர்களாகவு மிருந்த போதிலும் முற்றிலும் நல்லவர்களல்லர்.

இப்பெரிய இரகசியத்தைக் கண்டு பிடிக்க அவர்கள் முயற்சி செய்யுங் காலங்களில் சாமானிய ஜனங்களுக்குத் தெரியாத வேறு சில விஷயங்களைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். அவர்கள் கற்றுக் கொண்ட வித்தையை வேண்டு மென்றே பிறரைத் துன்பப்படுத்தவும் பயமுறுத்தவும் உபயோகிக்காம லிருந்த போதிலும் ஜனங்கள் அவர்களைக் கண்டால் பயப்படுகிறதும் அவர்கள்பேரில் கோப்பப்படுவதுமாயிருந்தது. சில சமயம் ஜனங்கள் அவர்களிட மிருந்து உதவி பெற்றுக் கொண்ட போதிலும் அவர்களிடம் பயமடைந்தார்கள். ஆகையால் இரசவாதிகளைக் கண்டுபிடித்த உடனே ஜனங்கள் அவர்களைப் பட்டணங்களி னின்றும் துரத்தி சில சமயம் கொன்றுமிருக்கிறார்கள். ஆனால் இவ் வித்தையைத் தெரிந்து கொள்ள வேண்டு

மென்ற ஆசையைக் கொல்ல முடிய வில்லை. ஆகையால் அவ்விதம் தப்பிப் போனவர்களுக்குப் பதிலாய் வேறு சிலர் கிளம்பினார்கள்.

ஜனங்கள் சாதாரணமாய் போக்கு வரத்தில்லாத சில விந்தையான இடங்களில் அவர்கள் மறைந்து திரிவதும் விநோதமானவிதமாய் அவர்கள் வேலைகளை நடத்துவதும் வழக்கம். எவ்விதத்தடைகளினாலும் அவர்கள் வேலையை நிறுத்துகிறதில்லை. அவர்கள் உயிரைக் கூட லக்ஷியம் செய்யாமல் அந்தத்தொழிலில் பிடிவாதம்சாதித்தார்கள். ஏனெனில் மானிடர்கள் ஒரு பொருளைச் சம்பாதிப்பது சிரேஷ்டமென்று தீர்மானித்தால் அதை எவ்விதத்திலு மடைவார்கள். அல்லது அம் முயற்சியில் உயிரை இழப்பார்கள்.

இரசவாதம் இரண்டு விதம். ஒன்று இஹலோகார்த்தமானது. மற்றது பரமார்த்தமானது. இவ்விரண்டிலும் மனிதர்கள் ஒரே காரியத்தைச் செய்கிறார்கள். அதாவது பெரிய இரகசியத்தைக் கண்டு பிடிக்க முயற்சி செய்வது. எவ்விதமாயினும் கீழான, உபயோகமற்ற, சாதாரன விஷயங்களை அல்லது பொருட்களைச் சுத்தமானதும், விலைமதிக்கக்கூடாததுமாக அல்லது அபூர்வமான தங்கமாக மாற்றுவதென்பதாம்.

இகலோகார்த்தமான இரசவாதி மற்ற உலோகங்களைத் தங்கமாக மாற்ற முயலுகிறான். பரமார்த்தமான இரசவாதி கோபம், அவநம்பிக்கை, விரோதம், பொறாமை முதலான கீழான மனோபாவங்களை சாந்தம், பக்ஷம், அன்பு, தயாளமென்ற சுத்தமானதங்கமாக மாற்ற முயற்சி செய்து அதில் வெற்றி யடைகிறான்.

இஹலோகார்த்தமான இரசவாதி யொருவனும் மற்ற உலோகங்களைத் தங்கமாகச் செய்வதில் அனுகூலமடையவில்லை. ஆனால் பரமார்த்தமான இரஸவாதிகளில் அநேகர் சாதாரணமும் கீழானவும் கெடுதலுமான சுபாவங்களை சுத்தமும் நன்மையும் அன்புமுள்ள சுபாவங்களாக மாற்றி யிருக்கிறார்கள். இவைகளை நமக்குக் கற்றுக் கொடுக்கப் பிரீதியுள்ளவர்களா யிருக்கிறார்கள்.

அவர்கள் சுத்தமும் சக்தியும் அழகும் வாய்ந்தவர்களா யிருப்பதினாலே நாம் அவர்களிடம் பக்தி செலுத்தி அவர்களைப் பூஜிக்கக்

கடமைப்பட்டிருக்கிறோம். அவர்கள் மகா ஞானிகள். அவர்களடைந்திருக்கும் பதவியை விடாமுயற்சியால் நாமும் அடையக்கூடும். முயற்சியை விட்டுவிடுவதுதான் நம்முடைய தவறுகளுக்குக் காரணமென்று அவர்கள் சொல்லுகிறார்கள்.

ஒரு பள்ளிக்கூடத்தில் ஒரு வருஷக்கடைசியில் பரீக்ஷை நடக்கும். அதில் சிலர் தேறுகிறார்கள். சிலர் தவறிப் போகிறார்கள். அப்படியே ஒரு உலகத்தின் முடிவில் பரமார்த்த இரசவாதத்தில் ஒரு பரீக்ஷை நடக்கும். நடத்தையில் மகா சுத்தமான தங்கம் போன்றவர்கள் தான் அதில் தேறுவார்கள்.

அது மகா கடினமான பரீக்ஷை. அப் பரீக்ஷைக்குப்போகும் மாணாக்கர்களின் மார்க்கம் வெகு கடினமும் கரடுமுரடுள்ளதும் ஒடுக்கமுமானது. அம் மார்க்கத்தின் கடைசியில் மகா குறுகலான வாயிலிருக்கிறது. அந்த வாயிலின் வழியாய் மகா சுத்தமான தங்கம் போன்றவர்கள் தான் போகக்கூடும். தவிரவும் அவ்வாயிலைக் கண்டு பிடிப்பது வெகு கடினம். அநேகர் அவ்வாயிலைக் கண்டுபிடிக்கு முன்னமே சோர்வடைகிறார்கள். அதைக் கண்டு பிடிப்பவர்கள் மிகவும் சொற்பம்.

இப்படித் தவறிப் போகிறவர்கள் பள்ளிக்கூடத்துக்கு மறுபடியும் வந்து பாடங்களைத் திரும்பவும் கற்றுக் கொள்ள வேண்டியவர்களாயிருக்கிறார்கள்.

(இன்னும் வரும்.)

வி. வெங்குஸ்வாமி ஐயர்.

நன்மொழி.

---

5. குயவன் சிருஷ்டித்த மட்பாண்டங்கள் யாவும் கொஞ்சகாலம் உபயோகப்பட்டுப் பிறகு உடைந்தே தீர்வது போலவேயாகும் மானிடரின் இவ்வுலக வாழ்வும். அந்தராத்மாவானது தன் சக்திகள் பல விகஸிக்கும் பொருட்டு ஸாதநமாகக் கொள்ளும் ஸ்தூல ஸூக்ஷ்ம உபாதிகளும் கொஞ்சகாலம் உபயோகப்பட்டுப் பிறகு தகர்ந்தே விடுகின்றன.

துகாராம் பாவாவின் சரித்திரம்.

(340-ம் பக்கத்தொடர்ச்சி.)

அவர்கள் வந்தவுடன் அவர்களை ஆலிங்கனம் செய்ய, அவர்கள் கொண்டு வந்த பிரசாதத்தைக் கொடுத்தார்கள். பிறகு நடந்த விருத்தாந்தங்களைச் சொல்லிப் புறப்பட்டுப்போனார்கள். அச்சமயத்தில் 11 அபங்கங்கள் செய்தார். ஆயுளைக் குறைத்து வைகுண்டத்துக்குக் கொண்டுபோகும்படிக்கும், உள்ளவரையில் பக்தியைக் காட்டும் பொருட்டு சரீரத் தார்ட்டியத்தைக் கொடுக்கும்படிக்கும் எப்போதும் சுவாமியைப் பிரார்த்திப்பார். வரவாமிக்க உதாசீனரானார். லோஹ கிராமத்திலுள்ளவர்களுக்கு இவர்மேல் அளவற்ற பிரீதி. அடிக்கடி வரவழைத்து மாசக் கணக்காய் வைத்துக் கொண்டு வீட்டுக்கு வீடு பஜனைகளைச் செய்துவைப்பார்கள். ஒரு சமயத்தில் துகாராம் போயிருக்கும்போது துருக்கர் அந்தவூரை ஆக்கிரமித்துக் கொள்ளையடித்தார்கள். அப்போதுகூட அவ்வூரார் தன நஷ்டத்தைப்பற்றி அதிகமாய் விசனப்படவில்லை. ஏனெனின் துகாராமருடைய உபதேசம் தன விஷயமாய் வெகு பலமாயிருந்தது. அச்சமயத்தில் துகாராம் அநேக அபங்கங்களைச் செய்தார். இந்த ஜனங்களுடைய துக்கத்தைப் பார்த்து அவருக்கு பிராணனை விடுவது நலம் என்று தோன்றி, தன்னைக் கொண்டு போகும்படி ஸ்வாமி விஷயமாய் அநேக அபங்கங்களைச் செய்தார்.

லோஹ கிராமத்தில் கொள்ளை கொடுத்தவர்கள் மிக்க விரத்தி அடைந்து வீடு வாயில்களை விட்டு துகாராமருடன் புறப்பட்டு அவருடன் கூடவே இருக்க இச்சித்து வந்துவிட்டார்கள். அவர் அதிகநாள் ஜீவித்திருக்கவில்லை. வைகுண்டத்துக்குப் போகவேண்டுமென்ற இச்சையே மேலிட்டுக் கொண்டிருந்தது. பால்குண சுத்தம் சமீபித்தது. அந்த மாதத்தின் ஏகாதசிமுதல் ஐந்து நாள் சமாராதனைகளும் பஜனைகளும் நடந்தன. யாத்திரைக்காக வந்தவர்கள் பஜனைகளைக்கேட்டு மிகவும் விரக்தர்களானார்கள். இச்சமயத்தில் அவர் பரலோக கமந விஷயமாகவே அபங்கங்களைச் செய்தார். பிரா

ணனைச் சீக்கிரமாய் விட்டுவிட வேண்டுமென்கிற நிச்சயம் செய்தார். இதைக் கேட்டவுடன் வந்தவர்களுக் கெல்லாம் நிரம்பவும் மனவருத்தமுண்டாயிற்று. இனி இவருடைய சஹவாசம் அரிது என்கிற துக்கம் அவர்களுக்கு மேலிட்டது. பால்குண ஸத்தியம் (பங்குனிமீ) பிரதிதினமும் இரவு முழுவதும் பஜனை செய்து, கடைசியில் அதிபிரீதியுடன் ஆரதி எடுத்து விட்டோபாவை நமஸ்கரித்து கோவிலிலிருந்து வெளியே வந்து இந்திரியாணி நதி தீரத்துக்கு அபங்கங்களை உரக்கச் சொல்லிக்கொண்டுபோனார். எல்லாரும் கூடப்போனார்கள். போகிறசமயத்தில் தன் பத்நியைப் பார்த்து நாங்கள் வைகுண்டத்துக்குப்போகப் போகிறோம், நீயும் வரவேண்டுமென்று சொன்னார். அப்போது அந்த அம்மாள் கர்ப்பிணியா யிருந்தபடியால் கூடவரமுடியாது என்று சொன்னாள். உடனே ஆசீர்வாதரூபமாக ஒரு அபங்கம் சொன்னார். அதின் அர்த்தத்தை அந்த அம்மாள் அறியவில்லை. வைகுண்டத்திற்குப் போகவேண்டுமென்று முன் சொல்லிக்கொண்டிருப்பதுபோலவே இப்போதும் சொல்லுகிறதாக நினைத்தாள். இந்த லோகத்தை விட்டே பரலோகம் போவார் என்று நினைக்கவேயில்லை. கூடப்போனவர்களும் சுவாமிகளுக்கு மனது மாறிப் போனதாக நினைத்தார்களே தவிர வாஸ்தவத்தில் வைகுண்டத்திற்குப் போவார் என்று நினைக்கவில்லை. நதி தீரத்துக்குப் போனவுடன் இவர்களுடைய உத்தரவு வாங்கிக்கொள்வதாய்ப் பல அபங்கங்களைச் செய்தார். பிறகு நதி மடுவில் குதித்தார். கடைசியில் செய்த அபங்கங்களில் விமானம் வந்திருப்பதாயும் அதில் அவர் ஏறிப்போவதாயும் சொல்லியிருந்தது. அந்த ஞாபகம் கூட இருந்தவர்களுக்கு வந்தவுடன் துகாராம் வாஸ்தவத்தில் வைகுண்டத்துக்குப் போய்விட்டதாகத் தெரிந்து கொண்டார்கள். வெகு வருத்தமடைந்தார்கள். ஊருக்குத் திரும்பினார்கள். ஆனால், துகாராமருடைய தமையன் கான்ஹபா, இராமேசுவரபட்டர், கங்காஜி, மவாள, கடூஸகர முதலான 14 முக்கிய சிஷ்யர்கள் இந்திரியாணி கரையிலேயே துக்கப்பட்டுக் கொண்டிருந்தார்கள். துகாராமரைக் காணாமல் திரும்புகிறதில்லை என்று நிச்சயம் செய்தார்கள். அவலீ அம்மாள் சாமாசாரம் கேட்டவுடனே அலறிக்கொண்டு குழந்தையுடன் ஓடிவந்தாள். பஞ்சமீபரியந்தம் இருந்தார்கள். துகாராம்,

காணப்படவில்லை. துகாராம் தன்னுடைய ஜாலரைக் கீழே போட்டிருந்ததைப் பார்த்து அன்றையதினம் துகாராம் வைகுண்டத்திற்குப் போனதை சூசிப்பித்ததாக நினைத்து அதையெடுத்துக்கொண்டு எல்லாரும் ஊருக்குத் திரும்பினார்கள். அவருடைய மரணதிதியைப்பற்றி, ஜாலர் பஞ்சமி தினம் கிடைத்ததால், அந்த திதியத்தான் எடுத்துக்கொள்ளவேண்டும் என்றும், சரீரம் அகப்படாதபடியால் அவர் கூட்டோடு கைலாசம் போயிருக்க வேண்டும், ஆகையால் உத்தரகிரியை செய்யக் கூடாது, பிராமண போஜனம் மட்டும் செய்ய வேண்டியது என்றும் இராமேசுவரபட்டர் சொல்ல எல்லாரும் ஒப்புக்கொண்டார்கள். அப்படியே ஊருக்கு வந்தவுடன் பிராமண போஜனம் நடத்தி இரண்டு நாள் கதையும் செய்தார்கள்.

குடும்பவரலாறு.

துகாராமருக்கு பத்நிகள் இருவர். முதலாவது பத்நியும் அவளுடைய பிள்ளையும் வயிற்றுக்கில்லாமல் மடிந்து விட்டார்கள். இரண்டாவது பத்நி அவலாபாயி என்னும் ஜிஜியா அம்மாள். இவள்விதந்துவானாள். துகாராம் சாகிற சமயத்தில் அவள் ஐந்து மாத கர்ப்பிணி. அவளுக்கு முன்னமேயே இரண்டு ஆண் பிள்ளைகளும் மூன்று பெண்களுமிருந்தார்கள். துகாராம் இறந்த பிறகு புருஷப்பிரஜை ஜனித்து நாராயணன் என்ற பெயருடன் விளங்கினான். ஆண் பிள்ளைகளின் பெயர் மகாதேவ, விட்டோபா. பெண்களின் பெயர், காசீ, பாகீரதி, கங்கா. காசியை லோஹ ஊரில் மோருே வம்சத்திலும், பாகீரதியை எலவாடியில் காடே வம்சத்திலும், கங்காவை ஜாம் வளியில் ஜாம்பளுகர வம்சத்திலும் கல்யாணம்பண்ணிக் கொடுத்தார்கள். ஒருதடவை சிவாஜி மகாராஜா துகாராமருடைய ஊருக்கு வந்து வீட்டுக்குப் போய் யோக க்ஷேமத்தை விசாரித்து நாராயணனுடைய கட்டிக்காரத்தனத்தைப் பார்த்து மெத்த சந்தோஷப்பட்டார். முன் தான் எழுதி வைத்திருந்த இனம் சாசனத்தையும் கொடுத்து விட்டுப்போனார். அவலாயி அம்மாள் சுசுரூஷையில் வெகு கவலையுள்ளவராயிருந்தார். அவலாயிஅம்மாள் ஊரில் எல்லாரும் புகழும்படி நடந்தாள்.

ஓம்தத்ஸத்.

ஏ. சிவராவ்.

ஆத்மபோதம்.

யோகபூமியாகிய இப்பரதகண்டத்தில் தக்ஷிண கைலாயமென்னும் அகஸ்திய கூடமென்றும் பெயர் வழங்கி வரும் பொதியமலைச்சாரலில் ஓர் மஹாரமணீயமும், கேவலம் இவ்வுலக இன்பத்தையே உறுதிப் பொருளாகக்கொண்டு நாடிவரும் அற்ப மனிதர்களுடைய உள்ளத்தையும் ஒருவாறு நிலை பெறச் செய்து ஈசுவரனது பொற்பாத கமலங்களுக்கு ஆளாக்கச் செய்யவல்ல பரிசுத்தமும், மேன்மையும் வாய்ந்த ஓர் குகைத் துவாரமுள்ளது.

அதைச்சுற்றிலுமுள்ளபொன்னருவி, தேனருவி, சம்பகமாலினீ, ஸஞ்சீவினீ* என்ற நான்கு அருவிகள் அப் பிரதேசத்தைப் பார்ப்பவர் கண்களுக்கு மிகுந்த ஒளியையும், அத் தீர்த்தத்தைப் பருகுவோர் நாவுக்குத் தீஞ்சுவையையும், அச்சாரலில் உலாவுவார்க்கு சுகந்தத்தையும், அத்தீர்த்தத்தில் ஸ்நானம் செய்வோர்க்கு அரோகதிடசரீரத்தையும் அளிப்பதுடன், அவ்வருவிகளின் சலசலவென்னும் சப்தம் நான்கு வேதங்களை சதுர்முகப் பிரஹ்மா தன் நான்கு முகங்களால் கோஷிப்பது போலு மிருந்தன. அந்த குகைத் துவாரத்தின் முன்னர் 10000 அடி சதுரமுள்ள ஒரு பெரும் பாறையானது மரகதப் பிரகாசத்துடன் விளங்கிக் கொண்டிருக்கும் காட்சி, தெய்வலோகத்திலிருக்கும் சந்திரகாந்தக் கல்லோ என்று பிரமிக்குமாறு இருந்தது. சற்று உள் நுழைந்து நோக்குமிடத்து அக்குகையின் நடுவில் ஓர் புலித் தோல் ஆசனத்தில் வீர ஆசனம் பூண்டு மரவுரி தரித்து, விபூதியை உத்தூளனமாய் அணிந்தமேனியையும் நீண்ட செஞ்சடையையும் உடைய பெரியார் ஒருவர் புன்னகையுடன் வீற்றிருந்தார். அவர் பூண்டிருந்த கோலங்களே அப்பெரியார் பெயர் சச்சிதானந்த யோகி என்று விளக்கி நின்றன. அவரைச் சுற்றிலும் நூற்றுக் கணக்கான சிஷ்ய கோடிகள் கைகட்டி வாய்புதைத்து மிகுந்த பக்தி சிரத்தையுடன் சாதக பக்ஷியானது மழைத் துளிகளை எதிர் பார்த்த வண்ணம் அப்பெரியார் வாயினின்

---

* பொன்னருவி ஒளியையும், சம்பகமாலினீ சுகந்தத்தையும், தேனருவி சுவையையும், ஸஞ்சீவினீ அரோகதிடசரீரத்தையும்.

றும் வெளிப்படும் அமிருத வாக்கை உட்கொள்ள மிக்க அவாக் கொண்டார் போலிருந்தார்கள். இவ்வாறு இவர்கள் விளங்கியது, தேவ சபை நடுவில் வியாழ பகவான் போலும், ஆகாயத்தில் தாரா கணத்தின் நடுவில் பூர்ண சந்திரன் போலும் காணப்பட்டது.

இத்தகைய பெரியார், மிக்கஆர்வத்துடன் தன் வாய் மொழி களை எதிர்பார்த்திருந்த சிஷ்யர்களை நோக்கிப் பின் வருமாறு சில வார்த்தைகளைச் சொல்ல ஆரம்பித்தனர்.

சச்சிதானந்தயோகீந்திரர்:—சிஷ்யர்காள்! நீங்கள் சிலகாலமாக வேதசாஸ்திரப்பொருள்களையும்,பிரஸ்தானத்ரயங்களின்* தத்வார்த் தங்களையும், யான் சொல்லக் கேட்டு நன்கு உணர்ந்தீர்கள். ஞான த்தில் விபரீத மட்டுமேயன்றி சந்தேகமும் பிரதிபந்தகமே† யாதலால் இனிமேலும் அச் சந்தேகங்கள் உண்டாகாவண்ணம், நீங்கள் என் னிடம் கேட்டறிந்தவற்றில் உங்களுக்கு நிகழும் சந்தேகங்களை நிவி ர்த்தித்துக் கொள்வீர்களாக. குருநாதன் இவ்வாறு திருவாய்மலர்ந்த வளவில் பிரதம சிஷ்யனுன தத்வராயன் என்பான் தனது ஆசங்கை கள்‡ சிலவற்றை மிகப் பணிவுடன் ஒன்றின்பின் ஒன்ருய் பின் வரு மாறு வினவலாயினன்.

தத்வராயன்:—ஸ்வாமி! தாங்கள் உபதேசித்த நூற்பொருள்க ளில் இன்பம், ஐஹிகம், ஆமுஷ்மிகமென இருவிதமென்றும், அவை களை அடையப் பொருளும் அருளும் முறையே வேண்டப்படுவன வெனவும் கூறக் கேட்டிருக்கிறோம். ஆயினும் அருளென்னும் நிவிர்த்தி மார்க்கத்தின் வழிப்படுவோர்க்குப் பொருள் பிரதிபந்தக மாயிற்றே, பொருளில்லாவிடிலோ இவ்வுலக இன்பம் கிடையாது. ஆகையால் இவ்வுலகஇன்பத்தைநாடிப் பொருளைக்கைக்கொண்டால், மோக்ஷ இன்பத்துக்கு ஹேது§ வாகிய அருள் கிடையாது. இத்தாத் பரியத்தை அநுசரித்தே தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனரும் மஹானுகிய பட்டினத்தடிகளும் பொருளைப் பிரதிபந்தகமாகவே எண்ணி அவ்விதம் அநுஷ்டித்துக்காட்டியு மிருக்கிறார்கள்.

---

* பிரஸ்தானத்திரயங்களாவன:—(1) உபநிஷத் பாஷ்யம். (2) பிரஹ்ம சூத்திர பாஷ்யம். (3) கீதாபாஷ்யம். † பிரதிபந்தகம்=இடையூறு.

‡ ஆசங்கைகள் - சந்தேகங்கள். § ஹேது - காரணம், வழிபாடு.

ஸ்ரீமான் லோககுரு ஆதிசங்கரரும், அடியில் காட்டியிருக்கும் சுலோகத்தின் தாத்பரியத்தைப் பார்க்க, அக்கருத்தே கொண்டிருக்கிறார்களென்பதில் சந்தேகமில்லை.

சுலோகம்.

ஆகிஞ்சந்யம் ஸாதய நித்யம்
நாஸ்தி தத: ஸர்வவெஶ: ஸுகம்।
ஸர்வத்ராப்ய நஹாஜாம்ஹி தி:
ஸர்வப்ரேஷா விஹிதா நீதி:॥

ஆகையால் தாங்கள் கிருபைகூர்ந்து இத்தாத்பரியத்துக்குச் சர்வ ஆதாரமாயிருக்கும் "அருளில்லார்க் கவ்வுலகமில்லை பொருளில்லார்க்கிவ்வுலகமில்லாகியாங்கு" என்னும் திருக்குறளின் தத்வார்த்தத்தை எங்களுக்குச்சொல்லி எங்கள் சந்தேகத்தை நிவிர்த்திக்குமாறு பிரார்த்திக்கிறோம்.

யோகி:—நீ கேட்கும் சந்தேகமானது மிகவும் சரியே. பக்விகளுக்கு * உண்டாகும் இச்சந்தேகமானது உனக்குமுண்டாயது, இனி நீ அடையப் போகும் உயர் நிலையைக் குறிக்கும் ஓர் சூசகமாகவே யிருக்கின்றது.

இவ்விதமே சர்வலோக சரண்யனான ஸ்ரீராமனும் ஒருவாறு வசிஷ்டமஹரிஷியால் சந்தேக நிவிர்த்தி யடைந்தான். அன்றியும் இச்சந்தேகமானது உன்னைப்போன்ற சிஷ்ய கோடிகளுக்கு மாத்திரமே யன்றி பொதுப்பட உலகத்து யாவர்க்குமே பெரிதும் பயன்படத்தக்கதாதலால் அதனை விரிவாய்க் கூறுகிறேன். மனத்தைச் சிதற விடாது ஒருமுகப்படுத்திக் கவனியுங்கள்.

பொருளென்பது பணத்தை மாத்திரம் குறிப்பதாகச் சொல்வது தகாது. பொருளென்ற பதமானது விஷயத்தைக் குறிக்கும். ஒரு செய்யுளின் பொருள் என்ற இடத்து அதன் விஷயத்தைக்குறித்தல் காண்க. விஷயங்களுக்கு ஆதாரம் இந்திரியங்கள். உலக வியாபாரங்கள் யாவும் பஞ்ச இந்திரியங்களாலேயே அநுபவிக்கப்

*பக்வி - மேன்முறைகளை அநுஷ்டிக்க அதிகாரியானோன்.

படுகின்றன. கண்ணில்லாத ஒருவனுக்கு எப்படி ரூபத்திறுலுண்டாகும் இன்ப துன்பங்களில்லையோ, காதில்லாத ஒருவனுக்கு எப்படி கீதம் முதலியவைகளா லுண்டாகும் இன்ப துன்பங்களில்லையோ, அவ்விதமே, ஐந்து இந்திரியங்களும் அற்ற ஒருவனுக்கு இவ்வுலக விஷயத்தாலுண்டாகும் இன்ப துன்பங்கள் கிடையா. ஆதலால் பொருளில்லார்க் கிவ்வுலகமில்லை யென்ற விடத்து இந்திரியங்களற்றவர்களுக்கு இவ்வுலக விஷயங்களாலுண்டாகும் இன்ப துன்பங்கள் கிடையா. இந்திரியங்கள் அற்ற நிலையானது ஜிதேந்திரியனின்.* மனத்தின் பக்குவத்தைக் குறிக்கிறது.

அப்படிப்பட்டவர்கள் முனிகளென்றும், மனதை அடக்கினவர்களென்றும் சொல்லப்படுவோர்கள். மனதை அடக்க முக்கிய சாதனம் தியானம். இது சகுணம், நிர்க்குணமென இருவகைப்படும். சகுணத் தியானத்தில் மூர்த்தி ஆராதனையால் ஒருவன் அடையும் பகவத் கிருபையே அருள். ஆகவே பொருளில்லார்க் கிவ்வுலகமில்லை; அதாவது தியானலோக முண்டென்று நன்கு விளங்குகிறது. ஏனென்றால் முற்கூறிய தாத்பரியங்களாலும், காரணங்களாலும், இந்திரியங்களைத் தியானத்தினாலேயன்றி ஒருவன் அடக்க முடியாதென்றும், அவ்வாறு செய்பவன் தியானியாகையால் இவ்வுலகத்திருப்பினும், தியான லோக வாசிபோல் இவ்வுலகப் பற்றற்றிருப்பான் என்பது கருத்து. சிஷ்யர்காள்! இப்பொழுது அநுஷ்டான காலம் வந்துவிட்டபடியால் இனியும் தாமதியாது அதைச் செய்து முடித்து பிறகு பாக்கியையும் விளங்கச் சொல்லுகிறேன்.

[எல்லோரும் அநுஷ்டானத்துக்குப் போய் விட்டார்கள்.]

யோகி:—சிஷ்யர்காள்! இப்பொழுது யான் சாவகாசமாயும் நிஷ்டை கலைந்து மிருப்பதால் முற்கூறியவற்றில் எஞ்சி நின்றவற்றைச் சொல்லத் தொடங்குகிறேன். நன்கு கவனித்துணர்வீர்களாக.

தத்வ:—ஹே! குருநாதா! தாங்கள் முன்பு கூறியவற்றில் பொருள் என்பது, மேற்கோள் ஆராய்ச்சியில், விஷயத்தைக் குறிக்கு

* ஜிதேந்திரியன் – இந்திரியங்களை ஜயித்தவன்.

மென்றும், விஷயத்தைப் பொருட்படுத்துவது இந்திரியங்களென்றும், அவ்விந்திரியங்களறிறவன் மனதைத்தீர்ந்த தியானி என்றும், தியானத்தில் பகவத்கிருபையே அருளென்றும், ஆகவே பொருளில்லார்க்கிவ்வுலகமில்லை தியானலோகம் உண்டென்றும், அப்பாக்கியவான் இவ்வுலகத்திலேயே ஜீவித்திருந்த காலத்தும் அவன் தியானபூனாகவிருப்பதின் நிமித்தம் இவ்வுலக இன்பதுன்பங்களால் சலனமடையாது வாழ்வானென்றும், திருவாய் மலர்ந்தருளினீர்கள். நன்கே கவனித்துணர்ந்தோம். ஆயினும் தியானம் இருவகையெனவும் அவற்றில் சகுணத்தியானத்தில் ஒருவன் அடையும் ஆனந்தமே அருளெனவும் மொழிந்தீர்கள். அதை இன்னும் சற்றுவிரிவாக எடுத்துரைத்து எங்கள் மனதில் ஊன்றச்செய்ய மிக்கவணக்கத்துடன் கோருகிறோம்.

யோகி:—அப்பனே! தியானம், சகுணம், நிர்க்குணமென இருவகைதான். அவற்றில் சகுணத் தியானத்தின் அநுஷ்டான மார்க்கத்தை உபதேசித்தபிறகு இச்சந்தேகங்கள் தாமே விலகிவிடுமென்பது திண்ணம். ஆகவே கவனியுங்கள். தியானமென்பது ஒருபொருளை அல்லது பதார்த்தத்தை அல்லது விஷயத்தைக் குறித்து இடைவிடாது, வேறுவிஷயங்களில் செல்லாத மனத்துடன் சிந்தித்தல். இவ்விதம் செய்ய, சிந்திக்கும் ஒருவனும், சிந்திக்கப்படும் பொருளும் சிந்தித்தற்கு ஏதுவாகிய ஞானமும் வேண்டும், இனியும் தியானயோகத்தின் அப்பியாச மார்க்கத்தில் உண்டாகும் ஸ்வாநுபவங்களைப் பற்றிச்சொல்லி: அருளென்பது தியானமூர்த்தியினிடமிருந்துநாம் அடையும் சுகாநுபவம் என்பதை நிரூபிக்க வேண்டியிருப்பதால் அதைப்பற்றிச் சொல்லப் போகிறேன். அது இனி நீங்கள் ஏற வேண்டிய படிகளில் முதலாவதாகையாலும் உணராது அப்பியசிக்கத்தொடங்குங்கால் அநேகவித இடையூறுகள் சம்பவிக்குமாதலாலும், சலியாத மனத்துடன் கேட்டு உணர்வீர்களாக.

சகுணத்தியான ஸ்வாநுபவங்கள்.

ஒருவன் தியானிப்பனேயானால் ஒரு மூர்த்தியைக் குறித்துத்தான் தியானித்தல் வேண்டும்.

(1) அம்மூர்த்தியானது ஆரம்பத்தில் நிலையாது அடிக்கடி மறையும். அப்படி மறையவிடாது, இவனது சிரத்தா பக்தியினால் நிலைபெற்றிருக்கச் செய்யின்,

(2) அது தியானிப்பவனை விட்டு அகன்று அதாவது தூரத்திற் போய் காணாது மறையும். அதையும் மேற்சொல்லிய சிரத்தா பக்தியினால் நிவிர்த்தி செய்யின்,

(3) அது நிலைபெறாது சமுத்திரத்தில் கிடக்கும் மரக்கட்டைபோல் ஓயாது அலைந்து கண்ணுக்குப் புலப்படாவண்ண மிருக்கும், இதையும் நிவிர்த்திக்குங்கால்,

(4) கடைசியாக அம்மூர்த்தியானது நிலை பெறும். பிறகு தான் ஒருவன் உண்மையில் தியானிக்க வாரம்பிக்கும் காலம். இதன் பிறகு உண்டாகும் அநுபவங்கள் வேறு. அவையாவன :—

(1) முதலில், அம்மூர்த்தியானது, நிலைபெற்ற பிறகு, யாதொருவித சைதன்னியமுமற்ற கேவலம் மரப்பாவையை ஒத்திருக்கும்

(2) பிறகு, தியான முதிர்ச்சியால், அம்மூர்த்தியில் சைதன்னியம் விளங்கும்.

(3) பிறகு, தியானிப்பவன் சிந்திக்கும் பிரகாரமே சகலகுண சம்பவங்களும் ஏற்படும். அதாவது தியானியுடன் பேசுதல், ஆடுதல், நடித்தல் முதலியன.

(4) இம்மூன்று தசைகளிலும் அம்மூர்த்தியானது இவனை விட்டு அகலாது நெருங்கியேவரும். மூன்றாவதாயுள்ள நிலையில்சர்வப்பிரயத்தினத்தாலும் முயற்சித்து தான் அடைந்ததாயுள்ள பாக்கியமாகிற கூடப்பேசுதல் நடித்தல் முதலியவைகள் இவன் அக்காலத்தும் பிறகு எக்காலத்தும் அநுபவிக்கும் பேரானந்தமே. இதைத்தான் பெரியோர்கள் அருளெனக்கூறுகிறார்கள். பிறகு நான்காவதாகிற நிலையில் அம்மூர்த்தியானது தியானியை விட்டகலாது நெருங்கியே வந்து முடிவில் இவனிடத்திலேயே லயத்தை யடைந்து

முதல் நான்கு அநுபவங்களும் நான்குவித உபதேசக்கிரமங்களென்றும், பின் நான்கும் ஸாலோக, ஸாரூப, ஸாமீப, ஸாயுஜ்ய மென்னும் நான்கு உயர் நலங்களென்றும் மஹான்கள் கூறியிருக்கிறார்கள்.

ப்ரஹ்மைவாஹம், தத்வமஸி என்ற மஹா வாக்கியங்களின் தாத்பரியங்களை விளக்கிநிற்கும். முன்கூறிய மூன்றுநிலைகளிலும், தியானி, தியானிக்கப்படும் பொருளாகிய மூர்த்தி, அநுபவானந்த மாகிய அருள் ஆகிய மூன்றும் வெவ்வேறாக விருந்து இந்த நான்காம் நிலையில் ஒன்றாகி நிற்கும். இதுவே அத்வைதநிலை. இதில் அருளும், அதைக் கொடுப்போரும் கிரஹிப்போரும் கிடையா வகையால் அப்படிப்பட்ட மகாயோகிகள் இவ்வுலகத்தில் காணப்படினும் அவர்கள் அபேத அத்வைத நிலையை அடைந்தவர்களாதலின் அவர்களை இவ்வுலக இன்பதுன்பங்களும் பரவுலக இன்பங்களும் சலிக்கச்செய்யாவாம்.

> புத்தியுக்தோ ஜஹாதீஹ உபே ஸுக்ருததுஷ்க்ருதே ।
> தஸ்மாத்யோகாய யுஜ்யஸ்வ யோக: கர்மஸு கௌஶலம் ॥

என்னும் கீதாவாக்கியமும்,

> ஜீவத்வம் ஸ்வதோஷாந்நிவ்ருத்தாநவஸ்தா
> ப்ரஹ்மாஜ்ஞாநாத்ப்ராந்தியோகாதிவாஸ்யா ।
> ஸர்வம் ப்ரஹ்மஜ்ஞாநஸித்தைர்நிவ்ருத்தா ஸ்வஸ்தா
> நிர்தோஷாஸ்ஸந்நவாஸ்யாத்யுபேதம் நிஜேஸ்வ ॥

என்னும் தேவதீர்த்த ஸ்வாமிகளுடைய மஹா வாக்கியமும் நன்கு விளக்கிக் காட்டும். ஆகவே பொருளில்லார்க் கிவ்வுலகமில்லை ஆனால் தியான லோகம் உண்டு. அருளில்லார்க்கு அவ்வுலக (தியான லோக) மில்லை. அபேத அத்வைத நிலைக்கிடமாகிய மோக்ஷ உலகம் உண்டு என்ற தத்வார்த்தத்தை விளக்கிக் கொண்டிருக்கும் திருக்குறளானது உங்கள் சந்தேகங்களைப் பூர்ணமாய்ச் சேதம் செய்வதுடன் நீங்கள் பெரும் பேறு அடையுமாறு ஆசீர்வதிக்கிறோம்.

தத்வ:—எங்கள் குருநாயகமே! அத்திருக்குறளின் தத்வார்த்தத்தை சந்தேகமற நன்குணர்ந்தோம். சகுணத்தியானத்தின் பூர்த்தியானது பக்தி சிரத்தையாலன்றி வேறு எவ்விதத்தாலும் அடைய முடியாதென்று மொழிந்த தங்கள் திருவாக்கினாலேயே அவைகளின் சூக்ஷ்ம அர்த்தங்களை விவரமாய்க் கேட்க அவாக்கொண்டிருக்கும் எங்களை அநுக்கிரகிக்க பிரார்த்திக்கிறோம்.

யோகி:—நல்லது, அவ்விதமே நாளை காலையில் அநுஷ்டானமானபிறகு கேட்பீர்கள். (இன்னும் வரும்).

யோகி சுந்தரராஜம்.

ஸ்ரீ ப. நாராயண ஐயரவர்கள்பேரில்

இரங்கற் பாக்கள்.

---

1. எங்குற்றா யிவ்வுலகை நீத்தே யிறைவியையோர்
பங்குற்றா னாடகமார் பாதநிழல்—தங்குற்றா
யோநாரணப் பெயர்கொ ளுத்தமனே யோதுபரி
வேனோர்பா லேயுறவைத் தே.

2. ஆரியமீ வல்லாய் தமிழ்வல்லாய் ஆங்கிலமும்
பாரினில் வல்லாய் பலவல்லாய்—சீரியநீ
இந்திர சாலமும் வல்லாய்கொ வின்பதுன்பந்
தந்தகலா தேயகன்றாய் தான்.

3. தன்னடக்க மன்பு சமரசஞா னம்சாந்தம்
இன்னனபோ திக்கு மியல்புடையோய்—துன்னு
மறைநூலாய் நிற்பிரிந்தா வாடு மெமக்கே
அறைதினினும் நன்மொழியை யா.

மு. வேங்கடசாமி நாட்டார்.

நன்மொழி.

---

6. இரவில் வழிதப்பித் திக்கற்றலையும் கப்பல்களுக்கு தீபஸ்தம்பங்கள் எவ்விதம் உதவுகின்றனவோ, அவ்விதமே மஹான்கள் அஞ்ஞாநிகளுக்கு ஞான வெளிச்சத்தை யருளி அவர்களை ரக்ஷிக்கின்றார்கள்.

7. சுத்த சர்மையும், நீதிநெறியுந் தான் ஒருவருக்கு உயர்ந்த பூஷணமாகும்.

பத்திரிகை வரவு.

மாதர் மநோரஞ்சநி :—இப்பெயருள்ள தமிழ் மாதாந்தப் பத்திரிகையின் டிஸம்பர் 1913 சஞ்சிகை வரப்பெற்றோம். அத்துடன் இப்பத்திரிகையின் 15-வது தொகுதி முடிவு பெறுகின்றது. நம் நாட்டில் பெண் கல்வியைப் பிரசாரம் செய்வதற்கேற்பட்டுள்ள முக்கிய சாதனங்களுள் இப்பத்திரிகையும் ஒன்றாகும். இப்பத்திரிகையில் பல்வேறு விஷயங்களைப்பற்றித் தெளிவான வியாஸங்கள் அநேகம் வெளிவருகின்றன. இது நந்நாட்டுப் பெண்டிர் அனைவரும் வாசிக்கத்தகுந்தது. (ப-ர்)

சமாசாரம்.

மதுரை பிரஹ்மஞான மந்திரத்தில் கூடிய 1—2—14 மீட்டிங்கில் ஷை சபையின் மெம்பர்களனைவரும் காலஞ்சென்ற ப. நாராயண ஐயரவர்களின் குடும்பத்தாருக்கு தங்கள் அனுதாபத்தைத் தெரிவிக்கவேண்டுமென்றும், ஷை ஐயரவர்களின் ஞாபகத்தை ஸதா நிலை நிறுத்தக் கூடிய தக்க ஏற்பாடுகள் செய்யப்பெறவேண்டு மென்றும், வழவழப்பான ஒரு கருங்கல் பலகையில் அவர்கள் பெயரையும் பிறந்த இறந்த தேதிகளையும் எழுதி ஹால் கட்டிடத்தின் சுவரில் பதிக்கவேண்டு மென்றும் தீர்மானம் செய்யப்பட்டது. ப. நாராயண ஐயரவர்கள் இருந்த காலத்தில் மதுரை பிரஹ்மஞ்ஞான சபையோர் எவ்வளவு ஊக்கமாயிருந்தார்களோ அதிலும் பன் மடங்கு அதிகமாகவே இப்போது காலஞ்சென்றவரின் ஞாபகத்தை எப்போதும் முன்னிறுத்தியே உழைத்து வருகிறார்கள். ஹைகோர்ட் வக்கீல் மா-ா-ா-ஸ்ரீ. அ. ரங்கஸ்வாமி ஐயரவர்கள் ஷை சபையின் · பிரஸிடெண்டாகவும் ஹைக்கோர்ட்வக்கீல் பிரஹ்மஸ்ரீ வி. ராமச்சந்திர ஐயரவர்கள் செக்ரிடரியாகவும் நியமிக்கப்பட்டார்கள். (ப-ர்)

மதுரை, கும்பகோணம், பரமகுடி, சேலம், திருச்சினாப்பள்ளி இந்தக் கிளைச்சபைகளிலிருந்து அநுதாபப் பத்திரிகைகள் ப. நாராயண ஐயரவர்கள் குடும்பத்தாருக்கு வந்திருக்கின்றன. (ப-ர்)

மதுரை பிரஹ்மஞான ஸபையில் வாரந்தோறும் நடக்கும் மீட்டிங்குகள்:—ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி முதல் 9 மணி வரை ஈ. எஸ். செக்ஷன் மீட்டிங். சாயங்காலம் 6-½ மணி முதல் 7-½ மணி வரை, மெம்பர்களல்லாத மற்றைப் பொது ஜனங்களுக்கும் உபயோகமாக ஏதேனும் விஷயமொன்றைப்பற்றி உபந்யாஸம் நடக்கும். பிரதி புதன் கிழமையும் சாயங்காலம்

6-$\frac{1}{2}$ மணி முதல் 7-$\frac{1}{2}$ மணி வரை "Hidden side of Things" என்ற பெயருடன் ஸ்ரீமான் லெட்பீடர் அவர்கள் வெளிப்படுத்தியிருக்கும் புஸ்தகத்தை பிரஹ்மஞான சபை உள்வகுப்பைச் சேராத அங்கத்தினர்களும் சேர்ந்த அங்கத்தினர்களும் எல்லோரும் படித்தல். பிறகு வெள்ளிக்கிழமை சாயங்காலம் 7-15 முதல் 8-15 வரை ஈ. எஸ். ஜெனரல் மீட்டிங் நடக்கும். (ப-ர்)

கும்பகோணம் "பிரஹ்ம வித்தியா லாட்ஜ்" என்ற பிரஹ்மஞான சபையோரின் 4—?—14உக் கூட்டத்து நடவடிக்கைகள்:—கும்பகோணம் ஸப்ஜட்ஜ் மகா-ள-ள-ஸ்ரீ A. S. பாலசுப்பிரமணிய ஐயரவர்கள், ப. நாராயண ஐயரவர்களின் குணாதிசயங்களை மிக வியந்து பேசி அநுதாபப்பட்டதுமன்றி, காலஞ்சென்ற மற்றொரு சகோதரர் பிரஹ்மஸ்ரீ நாராயணராவ் அவர்கள் தமக்கு வாலிபம் முதல் தெரிந்தவரென்றும், அதுமுதலே அவர் அன்பு, ஸத்திய ஒழுக்கம் முதலிய குணங்களிற் சிறந்தவராக நன்கு மதிக்கப்பெற்றாரென்றும், ஞானம், நல்லொழுக்கமின்றிய இழிய எளிய பிறப்பினரிடம் இவர் வைத்த கருணை மெச்சத்தக்கதென்றும், அச்சபையோர் நடத்தும் பஞ்சமர் பள்ளிக்கூடத்தையும் நன்கு மேல்பார்த்து வந்தாரென்றும் கூறினர். இதை யனுசரித்தே மற்றைய சில மெம்பர்களும் காலஞ்சென்ற இரண்டு சகோதரர்களுடைய, பிரஹ்மஞான சபைக்காக ஊக்கமான உழைப்பைப்பற்றி வியந்து அதை நாமும் அநுஸரித்தல் வேண்டுமென்றும் கூறி, மேலும் பிரஹ்மஸ்ரீ நாராயண ராயரவர்கள் பெரிய பால ஸம்ஸாரத்தைப் பின்விட்டு அதற்கேற்றதக்க சொத்தைத் தேடிவைக்கவில்லையென்றும் விசனித்தார்கள். காலஞ்சென்ற நாராயணராயரவர்களின் பிரோமைட்(Bromide)படத்தை லாட்ஜ் கட்டிடத்தில் வைப்பதாக மகா-ள-ள-ஸ்ரீ T. S. சுப்பிரமணிய ஐயரவர்களும், ராயரவர்களின் ஞாபகார்த்தம் கும்பகோணம் பள்ளிக்கூடங்களில் படிக்கும் சிறுவர் சிறுமிகளுக்குள் நன்னடக்கைக்காக வருஷந்தோறும் ரூ 15க்கு பரிசளிக்க வேண்டிய தொகையை ஷெ லாட்ஜ் கம்மிட்டியாரிடம் கொடுக்க மகா-ள-ள-ஸ்ரீ T. K. சிவராம ஐயரவர்களும் வாக்களித்தார்கள். மேற்கண்ட நோக்கங்கள் எல்லாவற்றையும், அங்கு கூடின சபையோர்கள் தீர்மானங்கள் ரூபமாகவும் ரிக்கார்டு செய்வித்தார்கள். ஷெ தீர்மானங்களையும் காலஞ்சென்ற இரு சகோதரர்களின் குடும்பத்தாருக்கும் அக்கிராஸனாதிபதி யவர்களைக்கொண்டு தெரிவிக்க ஏற்பாடு செய்யப்பட்டது. காலஞ்சென்ற மஹான்களின் செய்ந்நன்றியை மறவாமல் நம் நடத்தையில் பாராட்டிக் காட்டுவோமாக.— அவரிருவர்களும் சீக்கிரம் திரும்ப நாம் பக்தியுடன் எதிர்பார்ப்போமாக. (நாராயணதாஸர்)

ஆத்தங்குடி, "பிரஹ்மஞான சபையில்" 1—2—14-ல் சகோதரர் P. தமரப்ப செட்டியாரால் செய்யப்பட்ட உபந்நியாசம்.:—

"சகோதரர்களே!

இன்று தினம் நம் பிரஹ்மக்ஞான சங்கச் சகோதரர்கள் கூடி இருக்கும் இச்சபையின்கண் சிற்றறிவுடைய யான் நமது சகோதரராகிய ப. நாராயணைய ரவர்கள் B. A., B. L., F. T. S. மரணத்தைப் பற்றிச் சில விஷயங்கள் சொல்லு தற்கு முன்வந்தேன்.

நமது காலஞ்சென்ற சகோதரரை யான் நேரில் கண்டவனல்லேனாலும் அவர்களுடைய தேசாபிமானத்தையும், மதாபிமானத்தையும், பரோபகாரக் குணத்தையும், சகோதரபாவத்தையும் நம்சபை மூலமாய் அறிந்திருக்கிறேன். அவர்கள் மதுரை "பிரஹ்மக்ஞான சபை" க்குத் தலைவராகவும், "பூர்ணசந்தி ரோதயம்" பத்திராதிபராயும், இன்னும் மதுரையிலுள்ள அநேக "சங்கங்களு க்கு" த்தலைவராகவும், காரியதரிசியாகவும் இருந்திருக்கிறார்கள். இவர்கள் நம் பிரஹ்மக்ஞான சபைசம்பந்தமான அநேக ஆங்கிலப்புத்தகங்களை நம்போன்ற ஆங்கிலம் தெரியாதவர்களுக்குத் தெரியும்படி மொழி பெயர்த்து வெளியிட்டி ருக்கின்றார்கள். இவர்களுடைய குடும்ப விஷயத்தைப் பற்றி பின் நமது சகோதரர் "பிரஹ்மஸ்ரீ சுப்பராமையரவர்கள்" சொல்லுவார்கள். இவர்களு டைய மரணமானது நமக்கு ஓர் பெரும் மனவருத்தத்தைக் கொடுக்கிறது. இனி இவர்களுடைய ஸ்தானத்தில் யார் நியமிக்கப் படவேண்டு மென்பது இன்று தினம் நம்மதுரைச்சகோதரர்களால் தீர்மானிக்கப்படும். இனி இவர் களைப் போல ஓர் மொழி பெயர்க்கும் பரோபகாரியைக் கடவுள் எப்பொழுது கொடுக்கப் போகிறார்? இவர்கள் இறந்தவிஷயத்தில் நம்சகோதர ரெல்லோரும் சேர்ந்து நம்மனப் பூர்வமான அநுதாபத்தை அவர்களுடைய குடும்பத்தாருக் கும் நமது மதுரைச் சகோதரர்களுக்கும் தெரிவிப்போமாக. இத்துடன் என்னு டைய சிறு உபந்நியாசத்தை முடித்துக் கொள்ளுகிறேன். சுபம்!! (ப-ர்)

ஆத்தங்குடி பிரஹ்மஞான கிளைச்சபையால் 1—2—14 ஏற்பட்ட தீர்மானங்கள்:—

இக்கிளைச் சபையானது—

1. காலஞ்சென்ற பிரஹ்மஸ்ரீ P. நாராயண ஐயர் அவர்களின் லோகோ பகாரமாகச் செய்துவந்த நன்மைகளுக்காக அவர்களுக்கு எந்நாளும் நன்றிபா ராட்டக் கடமைப்பட்டிருக்கிறது.

2. காலஞ்சென்ற பிரஹ்மஸ்ரீ P. நாராயண ஐயர் அவர்களின் ஜீவன் மேலானபதவியை அடையவேண்டு மென்று ஈசுவரனைப் பிரார்த்திக்கிறது.

3. காலஞ்சென்ற பிரஹ்மஸ்ரீ P நாராயண ஐயர் அவர்களின் குடும்பத்தா ருக்கு மனப் பூர்வமான அனுதாபத்தைத்தெரிவிக்கிறது. (எஸ். சாமிநாதஐயர்)

ஆத்தங்குடி ஸரஸ்வதி விலாஸ ஸபை வருஷோத்ஸவக் கூட்டம்:— 29-12-13 காலை 8 மணிக்கு, உள்ளூர் வாசிகளும் அயலூர் வாசிகளும் ஆகிய வித்வான்களும் சீமான், சீமாட்டிகளும் சபை நடைபெறும் கட்டிடம் வந்து சேர்ந்தனர். சுமார் 300 ஆண்மக்களும், 200 பெண் மக்களும், தங்கள் தங்களுக்குத் தனித்தனி விரிக்கப்பட்டிருந்த ரத்நகம்பளங்களில் மிகவும் அமைதியோடு வீற்றிருந்தனர்; உடனே ஷ வித்யாசாலை உபாத்தியாயர் பிரஹ்ம ஸ்ரீ M. சுப்பராமையரவர்கள் கடவுள் வாழ்த்துக்கூறி, மதுரை 'மாணவர் செந்தமிழ்ச்சங்கத்து' அக்கிராசனாதிபதியாகிய பிரஹ்ம ஸ்ரீ M. கோபால கிருஷ்ணையரவர்களை அக்கிராசனம் வகிக்கும்படி கேட்டுக்கொள்ள, அவர்களும் அங்ஙனமே அக்ராசனம் வகித்தார்கள்.

இவ்வாறு பலவித்வான்களும் சீமான்களும் நிரம்பிய பேரவையில், முதலாவதாக, 'மதுரைத்தமிழ்ச்சங்கம் கலாசாலை' முதல் உதவி உபாத்தியாயர் பிரஹ்ம ஸ்ரீ சு. ஹரிஹரையரவர்கள் "ஈகை" என்னும் விஷயத்தைப்பற்றி முக்கியமாய் கர்ணன், சிபி, மஹாபலி முதலிய புராதன வள்ளல்களின் கொடைத்திறங்களையும், இப்பொழுது தேச நன்மைக்காக உடல், பொருள், ஆவி, மூன்றையும் சமர்ப்பித்து வரும் Mr. கோகலே, காந்திமுதலிய பரோபகாரிகளின் குணாதிசயங்களையும் கேட்போர் மகிழப் பிரசங்கித்து முடித்தனர்.

அதன் பின்னர் பசுமலை ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் பிரஹ்ம ஸ்ரீ கெ. ரா. சுப்பிரமணிய சர்மா அவர்கள் 'தமிழ் மொழியின் சரித்திரத்தைப்'ப்பற்றி, அதன் பூர்வ நிலைமையையும், அதை வளர்த்து வந்த சங்கங்களின் பெருமையையும், அதன் தெய்வீகத் தன்மையையும், பிற பாஷைகளின் துணை வேண்டாது தனித்து நிற்கும் தன்மையையும், கூறியதோடு, இடைக்காலத்தில் தமிழ்ப்பாஷையடைந்த மெலிவையும், இப்பொழுது ஆங்காங்குக் கிளைத்து வரும் பூரிப்பையும் முறையாகப் பேசி முடித்தனர்.

உடனே, ஷ வித்யாசாலை மாணவருள் ஒருவராகிய P. குமரப்பன் 'ஆங்கிலமொழியின் அவசியத்தை'ப்பற்றி, அது ராஜபாஷையாயிருத்தலின் அதை அவசியம் கற்கவேண்டு மென்பதையும், அவ்வொரு பாஷை மட்டுமே, இவ்வுலகமெங்கும் பரந்திருக்கும் பாஷை என்பதையும், அப்பாஷையில் சர்வசாஸ்திரங்களும் அமைந்துள்ளன என்பதையும், ஆங்காங்குள்ள பற்பல வெளிநாடுகளுக்குச் சென்று வியாபாரஞ் செய்யும் நம் வணிக மக்கள் 'ஆங்கிலம் கல்லாத குறையால்' அங்குள்ள ஆங்கிலேயர்களால் மிருகப்பிராயமாகக் கருதப்படுகிறார்கள் என்பதையும், சவிஸ்தாரமாக ஆங்கிலத்திலும், தமிழிலுமாகப் பேசிமுடித்தனர்.

பின்னர், மு. இராமசாமி, சிவ. சிதம்பரம், இவ்விருவரும் 'மதவிஷயத்தைப்பற்றி' ஒரு சம்பாஷணை செய்யத் தொடங்கி பல மதங்களுள்ளன எனவும், எதேனும் தனக்குரிய ஓர் மதத்தைக் கைக்கொண்டு பிற மதங்களைத் தூஷிக்காமல் கடவுளை வணங்குவதே சிறந்ததெனவும் பேசிமுடித்தனர்.

" கடைசியாக, அக்கிராசனர் எழுந்து, மேல் உபந்நியசிக்கப்பட்ட விஷயங்கள் ஒவ்வொன்றையும், தனித்தனி சிறப்பித்துக் கூறியதோடு அவ்விஷயங்களைத், தாம் தமிழிலும், ஆங்கிலத்திலும் உள்ள பற்பல கதைகளாலும், பிரமாண வாக்கியங்களாலும், வேண்டிய வளவு விளக்கித், தன்னை மறந்தவராய்ப் பிரசங்கமாரி பொழிந்தனர். உடனே பிரஹ்ம ஸ்ரீ M. சுப்பராமையரவர்கள் அக்ராசனருக்கு வந்தன மளித்துப் பூமாலை சூட்டவும் 12 மணிக்குச் சபை கலைந்தது.'

மறுபடியும், மாலை 3 மணிக்குச் சபை கூடப்பெற்றதும், பிரஹ்மஸ்ரீ M சுப்பராமையரவர்கள் கடவுள் வாழ்த்துக்கூறியதோடு, பிரஹ்மஸ்ரீ வி. இராமச்சந்திர ஐயர் (B. A., B. L, F. T. S.) அவர்களை அக்ராசனராக வேண்ட அவர்களும் அங்ஙனமே வகித்தனர்.

முதலில், ஸ்ரீநிவாஸன் என்னும் 7 வயதுள்ள பிராமணச்சிறுவன் 'அழுக்காறாமை' என்னும் விஷயத்தைக் கேட்போர் ஆநந்திக்கும்படி, அழுக்காவது பிறர் கல்வி செல்வங்களைக் கண்டு பொறாமை எனவும், அது பல தீமைகளையும் விளைவித்துப் பின் நரகிற்கு ஆளாக்கும் என்பதற்குத் துரியோதனன் செய்கைகளே போதிய சான்றாகுமெனவும், சொற் சோர்வு பொருட் சோர்வுகளின்றிப், பெரியோரினும் வியப்புறப்பேசியதோடு, திருவாசகப் பாசுரம் ஒன்றை இன்னிசையோடு பாடி நிறுத்தினன். உடனே தி. செகப்பி, மு. செகப்பி என்ற இரண்டு வணிகச் சிறுமிகள், 'பெண்கல்வி'யைப்பற்றி ஓர் சம்பாஷணை செய்தனர். அதில், பெண்களனைவரும் அவசியம் கல்வி பயில வேண்டும் என்பதையும், முற்காலத்திலும் ஔவையார் முதலிய பெண் மூதாட்டிகள் கல்வி கற்றே உயர்ந்துளா ரென்பதையும், கல்வி யில்லாவிட்டால் பெண்களுக்கு வருகிற பல தீமைகளையும் விளங்க எடுத்துரைத்த சாதுரியங் கண்ட சபையோர், அப்பெண்மணிகளையும், அவர்கட்கங்ஙனம் பயிற்றுவித்த ஆசிரியர்களின் நன் முயற்சியையும், மிக வியந்து கூறினர்.

பின்னர் தேவகோட்டை ஸ்ரீமத் சோ. வேலுச்சாமிக் கவிராயரவர்கள் 'சபையின் நன்மையை' ப்பற்றி நன்கு உபந்யசித்தனர்கள்.

அதன் பின்பு, மதுரைக் காலேஜ் தமிழ்ப்பண்டிதர் பிரஹ்மஸ்ரீ M. கோபாலகிருஷ்ணையரவர்கள் "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்ற ஆன்றோர் மொழியைப்பற்றி நன்கு உபந்யசித்தார்கள்.

முடிவில், அக்ராசனம் வகித்த பிரஹ்மஸ்ரீ வி. இராமசந்திர ஐயரவர்கள் மேல் உபந்யசிக்கப்பட்ட விஷயங்கள் ஒவ்வொன்றையும் சிறப்பித்துக் கூறித் தாம் 'வருங்காலம்' என்ற விஷயத்தைத், திரிகாலக்ஞானியாய் நின்று, காலங்களின் இயல்பையும், அவற்றின் மாறுபாட்டையும், பிரத்தியக்ஷம், அநுமானம் முதலிய பிரமாணங்களால் விளக்கி, வருங்காலத்தில் பரமதயாளுவான சுப்பிரமணியக்கடவுள் காலத்திற் கேற்ற அவதார புருஷராகத் தோன்றி, கல்வி, அறிவு, நட்பு, நாகரிகம், வியாபாரம் முதலிய சம்பத்துக்களால் நாளுக்கு நாள் சமீபத்தை யடைந்து, ஒருமைப்பட்டு வரும் எல்லா தேசங்களையும் ஈடேற்றுவார்; என்று பல கண்டங்களிலுமுள்ள ஒவ்வொரு மகான்களும், கருதுகிறபடியாலும், அது, சுருதி, யுக்தி, அநுபவங்களுக்கு ஒத்திருத்தலாலும், சமீபத்தில் அத்தகைய அவதாரம் சம்பவிக்கும் என்பதற்கு யாதொரு சந்தேகமுமில்லை; என்று உறுதிமொழி கூறி, அதற்கேற்ப, நாமெல்லோரும் மனதைச் சீர்திருத்திக் கொண்டு, சமரச சன்மார்க்கத்தைக் கைப்பற்ற வேண்டு மென்று பக்தி பரவசராய் நின்று பிரசங்கமாரி பொழிந்தனர்.

உடனே, பிரஹ்மஸ்ரீ M. சுப்பராமையரவர்கள், அக்கிராசனாதிபதியவர்கள் சிரமத்தைக் கருதாது வந்து அக்ராசனம் வகித்துப் பிரசங்கமாரி பொழிந்த நன்றியை வியந்துகூறி, பூமாலை சூட்டவும், 6 மணிக்குச் சபை கலைந்தது.

மறுதினம் (30—12—13) காலை 9 மணிக்குச் சபை கூடப் பெற்றது. ஸ்ரீநிவாசன் என்னும் சிறுவன் கடவுள் வாழ்த்துக் கூறினன். பிரஹ்மஸ்ரீ M. சுப்பராமையரவர்கள் வேண்டுகோட் கிணங்கி, அன்று அவண் விஜயஞ் செய்திருந்த புதுக்கோட்டை போலீஸ் டிப்டி ஸுப்பரிண்டெண்ட், பிரஹ்மஸ்ரீ A. G. கிருஷ்ண்சாமி ஐயரவர்கள் அக்கிராசனம் வகித்தனர்.

முதலாவதாகப் பாளையங்கோட்டை ஸ்ரீமத் ஆண்டியப்பபிள்ளை யவர்கள் 'யுகதர்மம்' என்ற விஷயத்தையும் பின் சொக்கலிங்கம்புத்தூர் 'மாணிக்கவாசக வித்யாசாலை' தலைமை யுபாத்தியாயர் பிரஹ்மஸ்ரீ ரெ. இராமமூர்த்தி ஐயரவர்கள் 'புகழ்' என்ற விஷயத்தையும், அதற்குப் பின், மதுரைக் காலேஜ் தமிழ்ப்பண்டிதர் பிரஹ்மஸ்ரீ M. கோபால கிருஷ்ணையரவர்கள் 'பெரியவர்' என்ற விஷயங் கைக் கொண்டு, அநேக பெருமைகளில் உலகத்திற் குழைக்கும் பெருமையே சிறந்ததென்றும், பெரியோராவர், செயற்கரிய செய்வாரென்றும், பெரியோர்களுடைய பிறப்பு முதலியவற்றைக் கருதி யிகழாது, அவர்களுடைய அறிவு ஆற்றல்களைக் கண்டு போற்ற வேண்டு மென்றும், அவர்கள் மூன்று காலங்களையும் உணர்ந்திருப்பினும், உலகிற் குறையாரென்றும், தாமரை யிலை நீர் போல், உலகிற் பற்றியும், பற்றாமலும் இருப்பர் என்றும், விரித்துரைத்தார்.

கடைசியாக எல்லா விமரிசைகளேயும் கண்டு களித்த அக்கிராசனாதிபதி யவர்கள், மேற் பிரசங்கிக்கப்பட்ட விஷயங்க ளெல்லாவற்றிலுமுள்ள சாராம் சங்களை மட்டும் எடுத்து விளக்கினார். பின்பு. M. சுப்பராமையரவர்கள் அக் கிராசனாதிபதி யவர்களின் கௌரவத்தையும், அவர்களுக்குள்ள பாஷாபிமான தேசாபிமானங்களேயும் வியந்து கூறிப் பூமாலை சூட்டவும் 12 மணிக்குச்சபை கலேந்தது.

30—12—13 மாலை 3 மணி முதல் சபை தொடங்கப் பெற்று, பிரஹ்ம ஸ்ரீ வி. இராமச்சந்திரையரவர்கள் அக்கிராசனாதிபத்தியத்தின் கீழ்க் கோனாப் பட்டுக் கற்பக விநாயக கலாசாலைத் தலைமை யுபாத்தியாயர் பிரஹ்மஸ்ரீ A. கோபாலைய ரவர்கள் கம்ப ராமாயணக் கற்பனை நயங்களுள், சிலவற்றை விவ ரித்துப் பேசினார்.

பின்னர் புதுக்கோட்டை போலீஸ் சூப்பரின்டெண்டெண்ட் A. G. கிருஷ் ணசாமி ஐயரவர்கள் 'கல்வி' யென்னும் விஷயத்தை யெடுத்துக்கொண்டு கல்வி யின் பெருமையையும், முற்காலத்துக் கல்வி பயின்ற முறையையும், இக்கால த்துக் கல்வியயிலும் முறையையும், அது உலகிற் கின்றி யமையாத சம்பத்து என்பதையும், நம் புராதன சாஸ்திரங்களைப் படிப்பதோடு, தற்காலத்துக்கேற்ப மேனாட்டார் போல சைன்ஸ் என்னும் சாஸ்திரங்களிலும் தேர்ச்சி யடைந்து, பெருமையைச் சம்பாதிக்க வேண்டும் என்றும், வேண்டிய அளவு நன்கு உபந் யசித்தனர்.

அதன் பின்பு, ஷை வித்யாசாலை உபாத்தியாயர் M. சுப்பராமையரவர் கள் 'ஸத்ஸங்கம்' என்ற விஷயத்தை வெகு விரிவாயும் தெளிவாயும் விளக்கிப் பேசினார்.

பின்பு, செகப்பி யென்னும் வணிகச் சிறுமி 'பெண்களின் கடமை யாவன, கணவனுக்கடங்கி நிற்பதும், கற்பின் வழி யொழுகுதலும் இல்லற தர்மங்களை இனிது நடத்தலும், ஒழிந்த நேரங்களில் கல்வி முதலியவற்றால் ஞானத்தை அபிவிருத்தி செய்து கொள்ளுதலும் ஆகும்' என்று, சபைக்கூச்ச மின்றித் தெளிவாகப் பேசியது, யாவரும் வியக்கத்தக்கதா யிருந்தது.

பின்பு, தேவகோட்டை 'வைசியமித்திரன்' உதவிப்பத்திராதிபர் ஸ்ரீமத் கோபால கிருஷ்ணப் பிள்ளையவர்கள் 'பக்தி' என்ற விஷயத்தை யெடுத்துக் கொண்டு, அது — மாத்ரு பக்தி, பித்ருபக்தி, குருபக்தி, ராஜபக்தி முதலிய வாகப் பல வேறுவகைப்படினும், அவ்வெல்லாப் பக்திகளிலும், தெய்வபக்தி, தேசபக்தி, பாஷாபக்தி, ஆகிய மூன்றுமே சிறந்ததென்பதைப் பல பிரமாணங் களால் நிருபித்தனர்.

பின்பு, மதுரை சுந்தரபாண்டிய ஓதுவாரவர்கள் 'புத்த பகவானின் திவ்ய சரித்திரத்தை' எடுத்து, அவர், ரோகணி நதிக் கரையிலுள்ள கபிலவாஸ்துவில் சுத்தோதனனுக்குப் புத்திரனு யவதரித்து, இளமையிலேயே சகலசாஸ்திர சம்பன்னராகி, பின் உலகியலறிந்து, ஞானத்தை யடைந்து, தாய்தந்தையரின் திருப்திக்காக அரசுபுரிந்து, அதன் பின்பு உலகசஞ்சாரம் பண்ணி, ஆங்காங்குள்ள எழு சக்ரவர்த்திகளைத் தனக்கடியவர்களாக்கி, உலகமெங்கும் பௌத்த சமயத்தைப் பரப்பி, ஜீவகாருண்யமே வடிவு கொண்டு நின்று, 82 வயது வரை உலகிற் குழைத்து, முடிவில் பாதபங்கஜ மலையில் சமாதி கூடின் வரையும் நடந்த வைபவங்க ளெல்லாவற்றையும் பரிபூர்ணமாகக் கூறி முடித்தனர்.

முடிவாக, அக்கிராசனதிபதியவர்கள் எழுந்து, மேல் பிரசங்கிக்கப்பட்ட விஷயங்களிலுள்ள அருமையான கருத்துக்களை மட்டும் உள்ளங்கை நெல்லிக் கனிபோல் விளங்க எடுத்துரைத்தனர். உடனே அக்கிராசனர்க்கு வந்தனமளித்துப் பூமாலை சூட்டவும் இரவு 8 மணிக்குச் சபை கலைந்தது.

இராப்போஜனம் முடிந்ததும் சொக்கலிங்கம்புத்தூர் நகரத்தார் அநேக வித்வான்களைத் தங்களூர்க் கழைத்துச் சென்று, மறுநாள் (31–12—13) காலையில் விருந்து செய்து, அவ்வூர் மாணிக்கவாசக வித்யாசாலையில் வைத்து எல்லோரையும் புகைப்படம் (போட்டோ) இறக்கி, 8 மணிக்குள் ஆத்தங்குடி நகரிற் கனுப்புவித்தனர். அங்ஙனஞ் செய்த அந்நகரத்தாரின் பாஷாபிமானம் ஒருநாளும் மறக்கற்பாற்றன்று.

31—12—13 காலை 9 மணிக்குக் கடவுள் வாழ்த்தோடு பிரஹ்மஸ்ரீ M. கோபாலகிருஷ்ணையரவர்கள் அக்கிராசனதிபத்தியத்தின்கீழ் சபை ஆரம்பிக்கப்பெற்றது. மதுரைக் காலேஜ் உபாத்தியாயர் பிரஹ்மஸ்ரீ ஜானகிராம ஐயரவர்கள் 'ராஜபக்தி' என்ற விஷயத்தைப்பற்றி உபந்யஸித்து விளக்கியபின்னர், தேவகோட்டை ஸ்ரீமத் கோபாலகிருஷ்ணபிள்ளையவர்கள் "தென்னாபிரிக்காவின் நிலைமை"யைப்பற்றித் தெளிவாக விளக்கி தென் ஆப்பிரிக்காவில் உள்ள நம் ஸஹோதரர்களுக்கு இவ்வாத்தங்குடி நகரத்தாரும், தங்களாலியன்ற உதவிபுரியவேண்டுமென்று சொல்ல, அந்நகரத்தாரும் நகரப்பொதுவில் ஒரு மொத்தத் தொகையை அனுப்புவதாக உடன்பட்டார்கள்.

அதன்பின்பு, ஸ்ரீமத். சுந்தரபாண்டிய ஓதுவாரவர்கள் 'ஜீவகாருண்யம்' என்ற விஷயத்தை உபந்யசித்தமேல் அக்கிராசனதிபதி யவர்கள் பிரசங்கிக்கப்பட்ட ஒவ்வொரு விஷயங்களையும் விளக்கி முடிவுரை கூறினர். பின் அக்கிராசனர்க்கு வந்தனங்கூறிப் பூமாலை சூட்டவும், தேவகோட்டை ஸ்ரீமத் சுப்பிரமணியதேசிகரவர்களும், வலையபட்டி, திரு. இராமஸ்வாமி ஐயங்காரவர்க

ளும் தேவாரத் திருவாய்மொழிப் பாசுரங்களை மதவேறுபாடின்றிச் சமரசமாக இன்னிசையுடன் பாடிமுடிக்கவும் 12 மணிக்குச் சபை கலைந்தது.

மாலை 3 மணி முதல் பிரஹ்மஸ்ரீ வி. இராமச்சந்திரையரவர்கள் அக்கிராசனாதிபத்தியத்தோடு சபை தொடங்கப்பெற்று, முதலில் வித்தியாசாலை மாணவர்கள் 'ஊழ்' 'வளவனுயினும் செய்ந்நன்றியறிதல்' 'ஆலயந்தொழுதல்' என்ற விஷயங்களையும், பின்னர் மதுரைக் காலேஜ் தலைமைத் தமிழ்ப்பண்டிதர் பிரஹ்மஸ்ரீ B B. சுப்பராமையரவர்கள்,'நட்பு' என்பதையும்,பார்த்திபனூர் ஸ்ரீமத் சண்முகஞ்செட்டியாரவர்கள் 'முயற்சி' என்பதையும், வலையபட்டி விநாயகவித்தியாசாலைத் தமிழ்ப்பண்டிதர் பிரஹ்மஸ்ரீ திரு இராமஸ்வாமிஐயங்காரவர்கள் 'அன்பு' என்பதையும், கீழைச்சிவப்பட்டி பிரஹ்மஸ்ரீ சேஷையரவர்கள் 'நாநாஜீவபேதம்' என்பதையும் தங்கள் தங்கள் புத்திநுட்பங்களோடு அழகுறப் பேசி யமர்ந்தனர்.

பின்னர் சபையோரை அக்கட்டிடவாயிலில் அமைத்துள்ள விமானத்தின் முன்பாகப் புகைப்படம்(போட்டோ) இறக்கினர்கள்.

அதன்பின்னர் ஸ்ரீமத் சுந்தரபாண்டிய ஓதுவாரவர்கள் 'பெண்கல்வி,யைப்பற்றி உபந்யஸித்ததில், நம் நாட்டில் முற்காலத்தில் 'பெண்கல்வி' வழக்கத்திலிருந்ததற்கு ஸாக்ஷியமாக புறநானூறு முதலிய புராதனநூற் பிரமாணங்களோடு ஔவையார், காவற்பெண்டு, நக்கண்ணையார், வெண்ணிக்குயத்தியார், பேய்மகள், இளவெயினி முதலிய மூதாட்டிகளின் வாலாற்றை உதாரணமாக விளக்கிப் பிரஸங்கமாரி பொழிந்தனர்.

பின்னர், அக்கிராசனுதிபதியவர்கள் ஆநந்த பாவசராய் நின்று இதுகாறும் நடந்தசபையின் பயனையும், நகரத்தாரும் மற்றையோரும், கைக்கொள்ள வேண்டிய கடைமைகளையும், சபையை மேன்மேலும் நன்னிலைக்குக் கொண்டுவரும் முயற்சியையும் உபதேசக்கிரமமாகக் கூறி முடிக்கவும், திரு. இராமஸ்வாமி ஐயங்கார் அவர்கள் இன்னிசையுடன் மங்களவாழ்த்துப் பாடிநிறுத்தினர். உடனே சபையோர் அக்கிராசனர்க்கும், வித்துவான்களுக்கும், மற்றையோர்க்கும் சந்தன புஷ்ப தாம்பூலாதிகள் வழங்கி யுபசரித்துப், பூமாலை சூட்டவும், பிரதியாக வித்வான்கள் பலர், சபையின் க்ஷேமத்தை முன்னிட்டுப் பாமாலை சூட்டவும், சாஸ்வதி விலாச சபையின் வருஷோத்சவம் முற்றுப்பெற்றது.

பின்னர் வாத்தியகோஷங்களோடு வித்வான்களை நகர்வலம் செய்வித்து, ஆண், பெண் ஆகிய இருபாலரும் உடன்வந்து மேம்படுத்திய அந்நகரத்தாரின் அன்பும் தேசாபிமானமும், பாஷாபிமானமும், மிகவியந்துகொண்டாடற் பாலவாம்.

இதனடிவில், 31—12—13. மாலை கோனுபட்டில் நடைபெறும் மாதாந்த சபைக்குச் சில வித்துவான்களை யழைத்துச்சென்று, அவர்களாற் பல பிரசங்கங்கள் செய்வித்து, அவர்களை யுபசரித்த அந்நகரத்தாருடைய அன்பும் பாஷாபிமானமும், அவருள், ஸ்ரீமான், முருகப்பசெட்டியாரவர்களுடைய பரிபக்குவ நிலைமையும், என்றென்றும் மறவாது புகழ்தற்குரியனவாம்

இம்மூன்றுதினங்களிலும், உள்ளூரிலும் அயலூர்களிலுமிருந்துவந்த சுமார் 200 பெண்மக்கள் தங்கள் அசௌகரியம் ஒன்றையும் கருதாது மிக்க அமைதியோடும், ஊக்கத்தோடும், இரண்டுவேளைகளிலுமிருந்து சபையைக் கௌரவப்படுத்தியதும், அங்கரிற் பெரும்பாலார் புலாலுண்ணுதல் ஒழிந்து, ஜீவகாருண்யம் கைக்கொண்டதும், 5 லக்ஷம்ரூபாய் செலவிட்டுச் சிவன்கோயிற்றிருப்பணி செய்ய உத்தேசித்திருக்கும் அந்நகரத்தார், ஸ்ரீமத் வி. இராமச்சந்திரையர் முதலிய அறிஞர் கூறியாங்கு, இக்காலத்திற்கேற்ற கலாசாலை விஷயமாக அத்தொகையில் ஒருபாகம் செலவு செயவ்தாக ஒப்புக்கொண்டதும், இச்சரஸ்வதிவிலாஸ ஸபையின் நல்லுபதேசப்பயனே என்பது உள்ளங்கை நெல்லிக்கனியாம்.

இத்தகைய, ஞானோபதேசஞ்செய்யும், சாஸ்வதிவிலாஸசபையும், அதனங்கங்களும், அவற்றைச் செவ்வனே நடத்திவரும் ஆசிரியர்களும், நகரத்தாரும், அரோகதிடகாத்திரத்தோடு, அஷ்ட ஐசுவர்யங்களும் பெற்று நீடூழி வாழுமாறு எல்லாம் வல்ல இறைவன் திருவருள்புரிவாராக. (ஹரிஹரையர்.)

370